# 1. அவள் ஒரு விலைமகள் (யோசுவா 2:1-7)

வேதாகமத்தில் பலதரப்பட்ட மனிதர்களின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் எழுதப்பட்டுள்ளன.[1] இவற்றில் பரிசுத்தமான பக்கதர்களினுடைய சரிதை மட்டுமல்ல, பாவிகளான மனிதர்களைப் பற்றிய விவரணங்களும் உள்ளன. வேதாகம சரித்திரத்தில் பரிசுத்தமானவர்களாக மாறிய பாவியான பல நபர்களை நாம் சந்திக்கலாம். இவர்களில், விசுவாசியாக மாறிய ஒரு விபசாரியைப் பற்றி பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டிலுள்ள 'யோசுவா' என்னும் புத்தகத்தின் இரண்டாம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்விபசாரியின் பெயர் 'ராகாப்' என்பதாகும்.[2] இஸ்ரவேல் மக்கள், வாக்குத்தத்த பூமியான "கானான்" என்னும் தேசத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இவள் அப்பிரதேசத்தில் இருந்த "எரிகோ" என்னும் பட்டணத்தில் ஒரு விபசாரியாக வாழ்ந்து வந்தாள். ஆனால் புதிய ஏற்பாட்டில் இவள் ஒரு விசுவாசப் பெண்மணியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள் (எபி.11:31).[3] அதுமட்டுமல்ல, இயேசுகிறிஸ்துவின் வம்சவரலாற்றில் இடம்பெறும் அளவுக்கு ராகாபிற்குப் பிற்காலத்தில் சிறப்பான இடம் கிடைத்துள்ளது (மத்.1:5).[4] இதற்குக் காரணம் இவள் ஒரு விபசாரியாக இருந்த போதிலும், தேவனை விசுவாசித்து ஏற்றுக் கொண்டமையாகும். உண்மையில், மனிதர்கள் எப்படிப்பட்ட பாவிகளாக இருந்தாலும், அவர்கள் தேவனை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அவர்களாலும் பரிசுத்தமானவர்களாக முடியும் என்பதற்கு ராகாப் சிறந்த உதாரணமாக இருக்கின்றாள்.

புதிய ஏற்பாட்டில் ராகாப் விசுவாசப் பெண்ணாகவும் (எபி.11:31). இயேசு கிறிஸ்துவினுடைய வம்சவரலாற்றில் இடம்பெறுபவளாகவும் இருப்பதனால் (மத்.1:5), அவள் ஒரு விபசாரியாக இருந்திருக்கமுடியாது என்று சில வேதஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். யூத வரலாற்றாசிரியர் ஜோசீப்பசும்,[5] யூதமதப்போதகர்களும்[6] ராகாப் ஒரு விடுதியின் சொந்தக்காரி என்றே குறிப்பிட்டுள்ளனர். எனினும், இது உண்மையாகவே இருந்தாலும், "ராகாப் அவ்விடுதியில் ஒரு விபசாரியாகவே இருந்தாள்"[7] என்பதை மறுப்பதற்கில்லை. யோசுவா 2:1, எபிரேயர் 11:31, யாக்கோபு

---

[1] பழைய ஏற்பாட்டில் மட்டும் 40 வீதத்திற்கும் அதிகமான பகுதி மானிட வாழ்வின் சரித்திர சம்பவங்களாகவே உள்ளன (G.D.Fee & D.Stuart, *How to Read the Bible for All its Worth*, p. 73). புதிய ஏற்பாட்டில் முதல் ஐந்து புத்தகங்களின் பெரும்பாலான பகுதி சரித்திரச் சம்பவங்களையே கொண்டுள்ளன

[2] put what is in Eerdmans Dictionary.

[3] எபிரேயர் 11ம் அதிகாரம், பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்த விசுவாச வீரர்களின் பெயர்ப் பட்டியலைக் கொண்டுள்ளது.

[4] இயேசுகிறிஸ்துவினுடைய வம்சவரலாற்று அட்டவணையில் இடம்பெறும் நான்கு பெண்களில் ராகாபும் ஒருத்தி.

[5] F.Josephus, *The Antiquities of the Jews*. V.8.2,7.

[6] பழைய ஏற்பாட்டின் அரமிக் மொழிபெயர்ப்பில் யூதமதப் போதகர்களின் இத்தகைய விளக்கம் உள்ளது (J.Harris, *Joshua: New International Biblical Commentary*, p. 31).

[7] M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p.

2:25 போன்ற வசனங்களில் ராகாப் ஒரு “வேசி” என்றே குறிப்பிடப்பட்டுள்ளாள்.[8] ராகாப் கானானிய மதவழிபாடுகளோடு சம்பந்தப்பட்ட ஒரு விபசாரி என்று சில வேத ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்ற போதிலும்,[9] “வேசி” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம், மதசார்பற்ற சாதாரன விபசாரியைக் குறிப்பிடும் வார்த்தையாகவே உள்ளது.[10] எனவே, எரிகோ என்னும் நகரில் ஒரு விபசாரியாக வாழ்ந்து வந்த பெண்ணைப் பற்றியே யோசுவா 2ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1. ராகாபிடம் வந்த அந்நியார்கள்

வேதாகமத்தில், விபசாரியான ராகாபின் வாழ்வுச் சரிதை, மோசேயின்[11] மரணத்தின் பின்னர் இஸ்ரவேல் மக்களுக்குத் தலைவனாகிய யோசுவா என்பவர் அனுப்பிய இரு வேவுகாரர்கள், அவளுடைய வீட்டிற்குச் சென்றதில் இருந்தே ஆரம்பமாகின்றது. 40 வருடங்களுக்கு முன்பு எகிப்திலிருந்து பறப்பட்டு வந்திருந்த இஸ்ரவேல் மக்கள் அச்சமயம், கானான் தேசத்திலுள்ள “யோர்த்தான்” என்னும் நதிக்கு கிழக்கே “சித்தீம்” என்னும் இடத்தில் இருந்தார்கள் (எண்.25:1).[12] அவர்கள் தேவனால் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு, முதலில் எரிகோ நகரைக் கைப்பற்ற வேண்டியதாய் இருந்தது. ஏனெனில், இந்நகரம் உறுதியான கோட்டையைக் கொண்டிருந்ததோடு, கானான் தேசத்தின் பிரதான பகுதிகளுடன் வீதிப் போக்குவரத்துப் பாதைகளினால் தொடர்புபடுத்தப்பட்டிருந்தது.[13] இதனால், எரிகோ நகரத்தைக் கைப்பற்றுவதற்கான திட்டங்களை வகுப்பதற்கு அவசியமான தகவல்களைப் பெறுவதற்காக, வேவுகாரர் இருவரை யோசுவா எரிகோவிற்கு

---

[8] யோசுவா 2:1ல் “வேசி” என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள “ஸோனா” (*zonah*) என்னும் எபிரேயப் பதம், “அந்நியர்களுடன் நட்புறவுடன் பழகுபவர்களைக் குறிக்கும் விதத்திலேயே பழைய ஏற்பாட்டில் உபயோகிக்கப்பட்டுள்ளது” என்னும் சிலரது விளக்கமும் (D.J.Wiseman, “Rahab of Jericho” in *Tyndale Bulletin*. 14 (1964), pp. 8-11), “ஆணின் துணையின்றி பெண்கள் வாழும் சமுதாயத்தில் குடும்பத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துபவளைக் குறிக்கின்றது” என்னும் விளக்கமும் (Cited in R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 83) ஏற்றுக்கொள்ளக்கூடியவைகள் அல்ல. புதிய ஏற்பாட்டில் ராகாபைக் குறிப்பிடும் போது உபயோகிக்கப்பட்டுள்ள “∴போர்னே” (*porne*) என்னும் கிரேக்கப் பதம் விபசாரியை மட்டுமே குறிப்பதனால், பழைய ஏற்பாட்டிலும் இதே அர்த்தத்துடனேயே எபிரேயப் பதம் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதனை மறுப்பதற்கில்லை (J.J.Davis & J.C.Whitcomb, *Israel from Conquest to Exile: A Commentary on Joshua – 2Kings*, p. 33; D.K.Campbell, *Joshua: The Bible Knowledge Commentary OT*, p. 330; W.W.Wiersbe, *Be Strong: An Old Testament Study – Joshua*, p. 36).

[9] H.L.Ellison, *Joshua – 2Samuel: Scripture Union Bible Study Books*, p. 4.

[10] J.Harris, *Joshua: New International Biblical Commentary*, p. 31.

[11] எகிப்தில் அடிமைகளாக இருந்த இஸ்ரவேல் மக்களை விடுவித்து அவர்களுக்குத் தாம் வாக்களித்த “கானான்” என்னும் தேசத்தைக் கொடுப்பதற்காகத் தேவன் மோசேயின் தலைமையின் கீழ் அவர்களை 40 வருடங்களாக வழிநடத்தி வந்தார். பழைய ஏற்பாட்டில் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் என்னும் புத்தகங்களில் இச்சரித்திரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மோசேயின் மரணத்தின் பின்னர் யோசுவா இஸ்ரவேல் மக்களுக்குத் தலைவராகினார்.

[12] “தெல் எல்-ஹம்மாம்” என்னும் பெயரில் தற்காலத்தில் யோர்தான் நதிக்கு கிழக்கே இருக்கும் பட்டணமே புராதன காலத்தில் “சித்தீம்” என்று அழைக்கப்பட்டதாகப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (N.Glueck, “Some Ancient Towns in the Plains of Moab” in *Bulletin of the American Schools of Oriental Research*. 91 (1943), pp. 7-26).

[13]

அனுப்பினான்.[14] யோசுவா 2ம் அதிகாரத்தின் முதல் வசனத்தில் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> நூனின் குமாரனாகிய யோசுவா, சித்தீமிலிருந்து வேவுகாரராகிய இரண்டு மனுஷரை 'இரகசியமாய் வேவுபார்க்கும்படி'[15] அனுப்பி, நீங்கள் போய் தேசத்தையும் எரிகோவையும் பார்த்து வாருங்கள் என்றான். அவர்கள் போய், ராகாப் என்னும் பேர் கொண்ட வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கினார்கள் (யோசுவா 2:1).

சித்தீமிலிருந்து எரிகோவிற்குச் சென்ற யோசுவாவின் இரு வேவுகாரர்களும், எரிகோவிலிருந்த விபசாரியான ராகாபின் வீட்டிற்குச் சென்றது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர்கள் ராகாபின் வீட்டிற்குச் சென்றது தவறு என்று சிலர் கருதுகின்றனர். ராகாப் ஒரு விபசாரியாக இருந்தமையால், பாலியல் காரணத்திற்காகவே வேவுகாரர்கள் இருவரும் அவளது வீட்டிற்குச் சென்றனர் என்பது சில வேத ஆராய்ச்சியாளர்களின் விளக்கமாய் உள்ளது.[16] ஆனால் யோசுவாவினால் அனுப்பப்பட்ட வேவுகாரர்கள் ராகாபின் வீட்டில் "தங்கியிருந்தனர்" என்றே இவ்வசனம் கூறுகிறது. அவர்கள் அவளோடு விபசாரத்தில் ஈடுபட்டது பற்றி இவ்வதிகாரத்தின் எந்த ஒரு வசனத்திலும் குறிப்பிடப்படவில்லை.[17] வேவுகாரர்கள் இரவில் தங்குவதற்காகவே

---

[14] கானான் தேசத்தைத் தேவன் இஸரவேல் மக்களுக்குத் தருவதாக வாக்களித்திருந்தமையால், அதைக் கைப்பற்றுவதற்கு முன்னர் யோசுவா வேவுகாரரை அனுப்பியதைச் சிலர் அவிசுவாசச் செயலாகக் கருதுகின்றனர் (R.Polzin, *Moses and the Deuteronomist. A Literary Study of the Deuteronomistic History: Part One. Deuteronomy, Joshua, Judges*, pp. 85-86.New York: Seabury Press, 1980). ஆனால், யோசுவா தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசித்தவராகவே செயல்பட்டுள்ளதை யோசுவா 1:11, 1:15 போன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. உண்மையில், யோசுவா வேவுகாரரை அனுப்பியது ஒரு இராணுவத் தலைவனுடைய புத்திசாதுரிய மிக்க செயலாகவே உள்ளது. ஒவ்வொரு தடவையும் யுத்தத்திற்கு முன்னர் வேவுகாரரை அனுப்பவதை யோசுவா தன் வழக்கமாகக் கொண்டிருந்தார் (யோசு.7:2). "தேவன் உதவி செய்கிறார் என்பதனால் மனிதன் தன் பொறுப்புகளையும் தான் செய்ய வேண்டிய காரியங்களையும் செய்யாமலிருப்பது தவறாகும்" (D.H.Madvig, *Joshua: The Expositors Bible Commentary Vol.3*, p. 259). "தேவ உதவி ஒருபோதும் மானிட செயல்களை இல்லாமலாக்கிவிடாது. அது எப்பொழுதும் மானிட செயல்களையும் உள்ளடக்கியதாகவே இருக்கும்" (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 33). மேலும், 40 வருடங்களுக்கு முன்பு மோசே கானானுக்கு வேவுகாரரை அனுப்பியபோது, அத்தேசத்தைத் தங்களால் கைப்பற்றமுடியுமா என்பதைப் பார்த்து வருவதற்காகவே வேவுகாரர்கள் அனுப்பப்பட்டனர். ஆனால் தற்போது, கானான் தேசத்தைத் தங்களால் கைப்பற்ற முடியும் என்பதை நன்றாக அறிந்திருந்த யோசுவா (அதை யோசுவா 40 வருடங்களுக்கும் முன்பே அறிந்திருந்தார்), எரிகோவிற்குள் எவ்வழியால் செல்வது என்பதை அறிந்து வருவதற்காகவே வேவுகாரரை அனுப்பினார் (McGee, J.Vernon, *Joshua and Judges*, p. 19).

[15] இவ்வசனத்தில், "இரகசியமாய் வேவுபார்க்கும்படி" என்னும் சொற்பிரயோகம், இஸ்ரவேல் மக்களுக்கும் தெரியாமல் யோசுவா வேவுகாரரை அனுப்பியதையே குறிப்பிடுகின்றது. 40 வருடங்களுக்கு முன்பு கானான் தேசத்திற்கு மோசே வேவுகாரரை அனுப்பியபோது அவர்கள் திரும்பிவந்து கானான் தேசத்தைப் பற்றி பகிரங்கமாக மக்களுக்கு அறிவித்த விடயங்கள், அதாவது, வாக்குத்தத்த தேசத்தைத் தங்களால் கைப்பற்ற முடியாது என்று கூறியதால் ஏற்பட்ட பிரச்சனைகளை அறிந்திருந்த யோசுவா (எண்.13-14), இம்முறை எவருக்கும் தெரியாமல் இரண்டு வேவுகாரரை இரகசியமாக அனுப்பியுள்ளார். (D.H.Madvig, *Joshua: The Expositors Bible Commentary Vol.3*, p. 259).

[16] A.G.Auld, *Joshua, Judges and Ruth: The Daily Study Bible*, p. 16; D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 260).

[17] சில வேத ஆராய்ச்சியாளர்கள், யோசுவா 3:1ல் "இராத்தங்கினார்கள்" என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ள பதத்தைப் போல, யோசுவா 2:1ன் இறுதியில் "அங்கே (அதாவது ராகாபின் வீட்டில்) தங்கினார்கள்" என்னும் சொற்பிரயோகம், இரவு தங்கியிருந்ததைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று கூறுவதோடு, யோசுவா 2:1ன் இறுதி வார்த்தை, "படுத்தல்" என்னும் அர்த்தமுடையது என்றும், இது வேவுகாரர்கள் "ராகாபோடு படுத்திருந்தார்கள்" அதாவது அவளோடு பாலுறவில் ஈடுபட்டார்கள் என்பதையே அறியத்தருவதாகவும் கூறுகின்றனர். மேலும், 3ம் வசனத்தில், "உன்னிடத்தில் வந்து உன் வீட்டுக்குள் பிரவேசித்தவர்கள்" என்னும் எரிகோவின் ராஜாவினுடைய மனிதரின் கூற்றும் பாலியலோடு சம்பந்தப்பட்ட கூற்றாக இருப்பதாகவும் இவர்கள் கூறுகின்றனர் (A.G.Auld, *Joshua, Judges and Ruth: The Daily Study Bible*, p. 16; P.A.Bird, "The Harlot as Heroine: Narrative Art and Social Presupposition in Three Old Testament Texts" in *Semeia*. 46 (1989), pp. 128-129). "2:1ல் உள்ள 'தங்கினார்கள்' என்னும் வார்த்தையை

ராகாபின் வீட்டிற்குச் சென்றுள்ளனர் என்பதை மறுப்பதற்கில்லை.[18] விபசாரியின் வீட்டிற்கு ஆண்கள் வந்துபோவது வழக்கம் என்பதனால், எரிகோவின் ஜனங்கள் தங்கள் மீது சந்தேகப்பட்டு, தாங்கள் வேவுகாரர் என்னும் இரகசியம் வெளிப்பட்டு விடாமல் இருப்பதற்காகவே, அவர்கள் ராகாபின் வீட்டிற்குச் சென்றுள்ளனர்.[19] மேலும், அக்காலத்தில் விபசார விடுதிகளே வேவுகாரர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும் இடங்களாகவும், எதிரிகளுக்கு சந்தேகம் வராத விதத்தில் வேவகாரர்கள் தங்கும் வீடுகளாகவும் இருந்தன.[20] எனவே, யோசுவா அனுப்பிய வேவுகாரர்கள் ராகாபின் வீட்டிற்குச் சென்றதைத் தவறு என்று கூறமுடியாது. உண்மையில், எதிரியின் நாட்டில் வேவு பார்க்கச் சென்ற இருவரையும் பாதுகாப்பதற்காகத் “தேவனே அவர்களை ராகாபினுடைய வீட்டிற்கு வழிநடத்திச் சென்றுள்ளார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.”[21] உண்மையில், நாமும் தேவனை நம்பி, அவர் நமக்குத் தந்தள்ள பணியைச் செய்யும் போது, ஆபத்தான சூழ்நிலைகளிலும் அவர் நம்மை அற்புதமான முறையில் பாதுகாத்து வழிநடத்துவார் என்பதற்கு இச்சம்பவம் சிறந்த உதாரணமாக உள்ளது.

வேவுகாரர் இருவரையும் தேவன் ராகாபின் வீட்டிற்கு வழிநடத்திச் சென்றதற்கு இன்னுமொரு முக்கிய காரணமும் உள்ளது. ராகாப் ஒரு விபசாரியாகவும், கானானியப் பெண்ணாகவும் இருந்த போதிலும், அவள் இஸ்ரவேலின் தேவனாகிய காத்தர் தமது ஜனங்களுக்காகச் செய்தவற்றைக் கேள்விப்பட்டிருந்தமையினால், அவரே உண்மையான தேவன் என்னும் விசுவாசம் அவளுக்கு ஏற்பட்டிருந்தது. யோசுவா 2ம் அதிகாரத்தில் 11ம் வசனத்தில் அவள் வேவுகாரரிடம், “உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும் கீழே பூமியிலும் தேவனானவர்” என்று கூறுவது இதை

பாலியல் அர்த்தத்துடனும் மொழிபெயர்க்க முடியும் என்பது உண்மை என்றாலும், ராகாபின் வீட்டில் வேவுகாரர்கள் ஒழுக்கக் கேடான முறையில் நடந்து கொண்டதாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை” (J.Harris, *Joshua: New International Biblical Commentary*, p.27-28) என்பதனால், அவர்கள் ராகாபின் வீட்டில் தங்கியிருந்ததை பாலியல் அர்த்தங்களுடன் மொழிபெயர்ப்பது தவறாகும். மேலும், யோசுவா 2:1ல், வேவுகாரர்கள் ராகாபின் “வீட்டில் தங்கியிருந்தார்கள்” (படுத்திருந்தார்கள்) என்று குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, பாலியல் அர்த்தத்துடன் அவர்கள் “ராகாபிடம் தங்கியிருந்தார்கள்” (படுத்திருந்தார்கள்) என்று இவ்வசனம் கூறவில்லை (B.K.Waltke, *Joshua: The New Bible Commentary: 21st Century Edition*, p. 239). யோசுவா 2:1ல் வேவுகாரர்கள் “வேசியின் வீட்டுக்குள் பிரவேசித்து, அங்கே தங்கினார்கள்” என்னும் சொற்பிரயோகம் விபசாரியுடன் பாலுறவில் ஈடுபட்டதைப் பற்றிய விவரணம் அல்ல. மூலமொழியில் “வீட்டுக்குள் பிரவேசித்து” என்னும் பதம், “கட்டிடத்திற்குள் செல்வதைக்” குறிப்பிடும் பதமாகும். விபசாரம் செய்ததைப் பற்றி குறிப்பிட “வீட்டுக்குள்” என்னும் பதத்தைச் சேர்க்கவேண்டியதில்லை. வேவுகாரர்கள் உண்மையிலேயே பாலியலுக்காகவே ராகாபின் வீட்டிற்குச் சென்றிருந்தால், நியாயாதிபதிகள் 16:1ல் சிம்சோனைப் பற்றி குறிப்பிட்டுள்ளவிதமாகவே யோசுவாவிலும் வேவுகாரரைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கும். அதாவது “வீட்டிற்குள் பிரவேசித்து” என்று அல்ல, மாறாக, “அவளிடத்தில் போனார்கள்” அல்லது “அவளிடத்தில் பிரவேசித்தார்கள்” என்றே குறிப்பிடப்பட்டிருக்கும். அதேபோல யோசுவா 2:1ன் இறுதி வார்த்தையும் “அங்கே தங்கினார்கள்” என்றல்ல, “அவளிடத்தில் தங்கினார்கள்” என்றே குறிப்பிடப்பட்டிருக்கும். (R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p.83). “வேவுகாரர்கள் தங்களது உயிரையே பணயம் வைத்து எதிரியின் நாட்டுக்குள் சென்றிருந்தமையால், அவர்கள் அச்சந்தர்ப்பத்தில் பாலியல் நோக்கத்துடன் ராகாபின் வீட்டிற்குச் சென்றார்கள் என்று கூறமுடியாது” (D.H.Madvig, *Joshua: The Expositors Bible Commentary Vol.3*, p. 260). 4ம் வசனத்தில் “என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள்” என்னும் ராகாபின் வார்த்தைகள் பாலியல் சொற்பிரயோகம் என்பது உண்மை என்றாலும், இது அரசனால் அனுப்பப்பட்ட மனிதர்களை ஏமாற்றுவதற்காக அவள் தந்திரமாக

[18] J.Lilley, *Joshua: New International Bible Commentary*, p. 287.

[19] C.F.Keil & Delitzsch, *Joshua, Judges and Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 34.

[20] M.Weinfeld, *The Promise of the Land: The Inheritance of the Land of Canaan by the Israelites*, pp. 141-143. Berkeley: University of California Press, 1993); S.A.Meier, *The Messenger in the Ancient Semitic World*, pp. 93-96. Atlanta: Scholars Press, 1988.

[21] J.Rea, *Joshua: Wycliffe Bible Commentary*, p.

அறியத்தருகின்றது. இதனால், “தம்மை விசுவாசித்த பெண்ணை இரட்சிப்பதற்காகத் தேவன் இஸ்ரவேலின் வேவுகாரர் இருவரையும் அவளின் வீட்டிற்கு வழிநடத்திச் சென்றுள்ளார்.”[22] உண்மையில், ஒருவன் எவ்விடத்தில் இருந்தாலும், எத்தகைய நிலையில் இருந்தாலும், அவன் தேவனைப் பற்றி கேள்விப்பட்டு, அவரே மெய்யான தெய்வம் என்று விசுவாசிக்கும் போது, தேவன் அற்புதமான முறையில் அவனை இரட்சிப்பார் என்பதற்கு இச்சம்பவம் சிறந்த விவரணமாக உள்ளது.[23]

## 2. ராகாபிற்கு வந்த அரசச்செய்தி

இஸ்ரவேலின் வேவுகாரர் இரகசியமாகவே ராகாபின் வீட்டிற்கு வந்த போதிலும், அவர்கள் அங்கிருப்பது எரிகோவின் அரசனுக்குத் தெரிந்து விட்டது. இதனால் அவர்கள் நாட்டை வேவு பார்க்க வந்தவர்கள் என்னும் எச்சரிப்பின் செய்தியை அரசன் ராகாபிற்கு அனுப்பினான். அக்காலத்தில் கானான் தேசமானது தனி ஒரு அரசனுடைய ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. நாட்டின் பிரதான நகரங்கள் ஒவ்வொன்றும் சிற்றரசர்களினால் ஆளப்பட்டு வந்தது.[24] தங்களது பட்டணத்திற்கு 5 மைல்கள் கிழக்கிலிருக்கும் யோர்தான் நதியின் மறுகரையில் இஸ்ரவேல் மக்கள் இருப்பதை எரிகோ நகரத்தினர் அறிந்திருந்தமையால், புதியவர்களின் வருகை குறித்து அவர்கள் மிகவும் ஜாக்கிரதையுடன் இருந்தனர். எனவே, புதியவர்கள் இருவர் நகரத்திற்குள் வந்து ராகாபின் வீட்டில் தங்கியிருப்பதை அறிந்து கொண்ட ஜனங்கள் அதைப்பற்றி உடனடியாக அரசனுக்கு அறிவித்திருக்க வேண்டும். இதனால், அரசனும், அவர்கள் யார் என்பதை ராகாபிற்கு அறிவிப்பதற்காககவும் அவர்களைக் கைதுசெய்வதற்காகவும் தன் சேவகரை அவளிடம் அனுப்பினான். யோசுவா 2ம் அதிகாரத்தில் 2ம் 3ம் வசனங்களில் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> தேசத்தை வேவுபார்க்கும்படி இஸ்ரவேல் புத்திரரில் சில மனுஷர் ‘இந்த இராத்திரியிலே’[25] இங்கே வந்தார்கள் என்று எரிகோவின் ராஜாவுக்குச் சொல்லப்பட்டது. அப்பொழுது எரிகோவின் ராஜா ராகாபண்டைக்கு ஆள் அனுப்பி, உன்னிடத்தில் வந்து, உன் வீட்டுக்குள் பிரவேசித்த மனுஷரை

---

22 D.K.Campbell, *Joshua: The Bible Knowledge Commentary OT*, p. 330.

23 இது பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது “மனுக்குலத்திற்கான மகத்தான வெளிப்படுத்தல்” என்னும் நூலைப் பார்க்கவும்.

24 யோசுவா 12ம் அதிகாரம் கானானியப் பட்டனங்களை ஆண்ட அரசர்களைப் பற்றி விபரத்தைக் கொண்டுள்ளது. புதை பொருள் ஆராய்ச்சியாளர்களினால் கண்டெடுக்கப்பட்ட கி.மு.14ம் நூற்றாண்டைச் சேர்ந்த கானானிய அரசர்களுக்கம் எகிப்திய அரசர்களுக்கும் இடையிலான கடிதங்களைக் கொண்டுள்ள “அமர்னா களிமண் ஏடுகள்” அக்காலத்தில் கானானியப் பட்டணங்கள் சிற்றரசர்களினால் ஆளப்பட்டுள்ளதை அறியத்தருகின்றது (M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p. 70; J.H.Walton, V.H.Matthews & M.W.Chavalas, *The IVP Bible Background Commentary: Old Testament*, p. 213).

25 “இந்த ராத்திரியிலே” என்பது வேவுகாரர்கள் எரிகோவிற்கு இரவுநேரத்திலேயே வந்தர்கள் என்னும் அர்த்தத்துடன் மூலமொழியில் உபயோகிக்கப்படவில்லை. மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள பதம் ஆதியாகமம் 19:1ஐப் போல “சாயங்காலம்” என்றே மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். “இரவில் நகரத்தின் வாயிற்கதவு அடைக்கப்படுவதனால், எவராலும் இரவு நேரத்தில் நகரத்திற்குள் வரமுடியாது” (D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 260). மேலும், “வாசலை அடைக்கும் நேரத்தில் இருட்டுவேளையிலே அந்த மனுஷர் புறப்பட்டுப் போய்விட்டார்கள்” என்று 5ம் வசனத்தில் ராகாப் கூறுவதிலிருந்து, வேவுகாரர்கள் இரவு வருவதற்கும் முன்பே நகரத்திற்குள் வந்துள்ளனர் என்பதை அறியத்தருகின்றது (C.F.Keil & Delitzsch, *Joshua, Judges and Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 34).

வெளியே கொண்டு வா. அவர்கள் தேசத்தையெல்லாம் வேவு பார்க்கும்படி வந்தார்கள் என்று சொல்லச் சொன்னான் (யோசுவா 2:2-3).

உண்மையில், எரிகோவின் அரசனும், அப்பட்டண மக்களும், தங்கள் நாட்டைப் பற்றி கரிசனையுடன் இருந்தது போல, கிறிஸ்தவர்களாகிய நாமும், நாம் வாழும் நாட்டின் நலனில் அக்கறையுடையவர்களாக இருக்கவேண்டியது அவசியம். கிறிஸ்தவர்கள் இவ்வுலகத்தில் அந்நியர்களாகவும் பரதேசிகளாகவும் இருப்பதனாலும், அவர்களின் குடியிருப்பு பரலோகத்தில் இருப்பதனாலும், பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் நாட்டைப் பற்றியும் சூழலைப் பற்றியும் எவ்வித அக்கறையும் அற்றவர்களாக இருக்கின்றனர். ஆனால், நாம் இவ்வுலகத்தில் வாழ்கின்ற காலத்தில் நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் ஆக்கபூர்வமான பங்களிப்பு செய்கிறவர்களாகவும், தேசிய பிரச்சனைகளைத் தீர்ப்பதில் முக்கிய பங்குவகிப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.[26]

## 3. ராகாபினால் வந்த அநுகூலம்

இஸ்ரவேலின் வேவுகாரர் இருவரும் ராகாபின் வீட்டில் இருந்தது அவர்களுக்கு அநுகூலமாகவே அமைந்தது. அரசச் செய்தியோடு தன் வீட்டிற்கு வருகிறவர்களைக் கண்ட ராகாப், இஸ்ரவேலின் வேவுகாரர் இருவரையும் ஒளித்துவைத்துவிட்டு, அவர்கள் தன் வீட்டிலிருந்து போய்விட்டார்கள் என்று கூறினாள். யோசுவா 2ம் அதிகாரத்தில் 4 முதல் 7 வரையிலான வசனங்களில் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த ஸ்திரீ அவ்விரண்டு மனுஷரையும் கொண்டுபோய் அவர்களை ஒளித்து வைத்து: மெய்தான், என்னிடத்தில் மனுஷர் வந்திருந்தார்கள். ஆனாலும் அவர்கள் எவ்விடத்தாரோ எனக்குத் தெரியாது. 'வாசலை அடைக்கும் நேரத்தில்'[27] இருட்டு வேளையிலே, அந்த மனுஷர் புறப்பட்டுப் போய்விட்டார்கள். அவர்கள் எங்கே போனார்களோ எனக்குத் தெரியாது. அவர்களைச் சீக்கிரமாய்ப் போய்த் தேடுங்கள். நீங்கள் அவர்களைப் பிடித்துக்கொள்ளலாம் என்றாள். அவள் அவர்களை 'வீட்டின்மேல்'[28] ஏறப்பண்ணி, வீட்டின்மேல் பரப்பப்பட்ட சணல் தட்டைகளுக்குள்ளே மறைத்து வைத்திருந்தாள். அந்த மனுஷர் யோர்தானுக்குப் போகிற வழியில் 'துறைகள்'[29] மட்டும் அவர்களைத் தேடப் போனார்கள்.

[26] நம் நாட்டில் நீண்டகாலமாக இருந்து வரும் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள் ஜெபிப்பவர்களாக மட்டுமே இருந்துள்ளனர். ஆனால், சமாதானத்தைக் கொண்டுவரும் வழிமுறைகளைக் கண்டறிந்து அவற்றை

[27] இவ்வசனத்தில் "வாசல் கதவு" ராகாபின் வீட்டு வாசல் கதவு அல்ல. இது எரிகோ பட்டணத்தின் வாசல் கதவைப் பற்றிய குறிப்பாகும்.

[28] இவ்வசனத்தில் "வீட்டின் மேல்" என்பது மூலமொழியின்படி "வீட்டுக்கூரையின் மேல்" என்பதாகும். அக்காலத்தில் வீட்டுக்கூரைகள் தட்டடையாக இருந்தமையால், பல்வேறு தேவைகளுக்கும் கூரைகள் உபயோகிக்கப்பட்டன. எனினும் சில வேதஆராய்ச்சியாளர்கள் இவ்வசனத்தில் "வீட்டின் மேல்" என்பதை "வீட்டின் மாடி" என்று மொழிபெயர்த்துள்ளனர் (R.Hess, *Joshua, Tyndale Old Testament Commentaries*, p. 87). திருவிவிலியத்திலும், இவ்வித ஆத்ததத்துடனேயே இவ்வசனம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ராகாபின் வீடு நகரத்தின் மதிற்சுவரில் இருந்ததாக யோசுவா 2:15 அறியத்தருகின்றது. அக்காலத்தில் நகர மதிற்சுவரின் ஜன்னல் சட்டத்திற்குள் கட்டப்படும் வீடுகள் இருந்துள்ளதை புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தள்ளனர் (L.E.Stager, "The Archaeology of the Family in Ancient Israel" in *Bulletin of the American Schools of Oriental Research*. 260 (1985), p. 16; Z.Herzog, "Cities in the Levant" in *Anchor Bible Dictionary Volume 1*, p. 1037).

[29]

அவர்களைத் தேடுகிறவர்கள் புறப்பட்டவுடனே வாசல் அடைக்கப்பட்டது[30] (யேசுவா 2:4-7).

ராகாப் இஸ்ரவேலின் வேவுகாரருக்கு அடைக்கலம் கொடுத்து அரசனுடைய ஆட்களிடமிருந்து அவர்களைப் பாதுகாத்தாலும்கூட, அவள் பொய் சொல்லி ஏமாற்றியதன் மூலமே அவர்களுக்கு அநுகூலமாக இருந்துள்ளாள். வேவுகாரர் தன் வீட்டில் இருந்த போதிலும், அவர்கள் தன் வீட்டில் இல்லை என்று அவள் பொய் சொன்னாள். அதுவும், அரசனுடைய மனிதர்களுக்கு சந்தேகம் வராத விதத்தில், அவர்கள் தன் வீட்டுக்கு வந்ததை மறைக்காமல், ஆனால், அவர்கள் இன்னும் தன் வீட்டில் இருப்பதை மட்டும் ராகாப் அவர்களுக்கு மறைத்துவிட்டாள். அதேசமயம் தான் இன்னும் எரிகோவின் அரசனுக்கே விசுவாசமுள்ளவளாக இருப்பதைக் காண்பிப்பதற்காக, வேவுகாரரைத் தேடிப்பிடிக்கச் செல்லும்படியும் அரசனுடைய ஆட்களை அவள் அவசரப்படுத்தினாள்.

உண்மையில், ராகாபின் பொய்யின் மூலமே அச்சந்தர்ப்பத்தில் வேவுகாரர் இருவரும் பாதுகாக்கப்பட்டனர் என்பதை மறுப்பதற்கில்லை. இதனால் ராகாபின் பொய்யைச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் தவறாகக் கருதுவதில்லை.[31] “யுத்த சூழலில் பொய் அவசியமானது”[32] என்று கூறும் இவர்கள், “நாம் பணத்தை எங்கே வைத்திருக்கிறோம் என்று கள்ளனிடமும், சொந்த நாட்டு நிலைமை பற்றி எதிரி நாட்டு ராணுவத்திடமும் உண்மையான தகவல்களைக் கொடுக்காது பொய்சொல்லி ஏமாற்றுவது சரியான செயலே”[33] என்றும் வாதிடுகின்றனர். இஸ்ரவேல் மக்களைப் பொறுத்தவரை, உண்மை என்பது “அயலானுக்கும் தேவனுக்கும் உண்மையாக இருத்தல்” என்று கூறும் சில வேத ஆராய்ச்சியாளர்கள், ராகாப் இஸ்ரவேலர் பக்கமாக இருந்தமையினால் அவள் சொன்னது பொய் அல்ல என்று வாதிடுகின்றனர்.[34] மேலும், புறஜாதியார் மத்தியில் பொய் சொல்வது பாவமாகக் கருதப்படாதமையினால், ராகாபின் பொய்யைச் சில வேத ஆராய்ச்சியாளர்கள் பாரிய குற்றமாகக் கருதுவதில்லை.[35] ஆனால், தேவனுடைய பார்வையில் எத்தகைய சூழ்நிலையிலும் பொய் பாவமானது என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.

ராகாப் உண்மையைச் சொல்லியிருந்தால் வேவுகாரர்கள் இருவரும் கொலை செய்யப்பட்டிருப்பார்கள். எனவே, ராகாபின் பொய் நியாயமானது என்று கூறுவது அர்த்தமற்றது. “ராகாப் உண்மையைச் சொல்லியிருந்தால், வேவுகாரரை அவளின்

---

[30] அதாவது, அரசனின் ஆட்கள் வேவுகாரரைத் தேடி நகரத்திற்கு வெளியே, யோர்த்தான் நதிக்கரை பக்கமாகச் சென்றவுடன், வேவுகாரர்கள் இன்னும் நகரத்திற்கு உள்ளேயே இருந்தால் அவர்கள் வெளியில் தப்பிச் சென்றுவிடாதபடி, நகரத்தின் வாசற்கதவு மூடப்பட்டது என்பதே அவ்வசனத்தின் ஆத்தமாகும் (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 36).

[31] O.H.Prouser, “The Truth about Women and Lying” in *Journal for the Stud of the Old Testament*. 61 (1994), pp. 15-18.

[32] B.K.Waltke, *Joshua: The New Bible Commentary: 21st Century Edition*, p. 239).

[33] R.C.Sproul, *Pleasing God*, p. 202.

[34] M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p. 71.

[35] W.W.Wiersbe, *Be Strong: An Old Testament Study – Joshua*, pp. 36-37.

வீட்டிற்கு வழிநடத்திச் சென்ற தேவன் அவர்களை வேறுவிதமாகக் காப்பாற்றி யிருப்பார்."[36] சில நேரங்களில் வேவுகாரர் மரிப்பதுகூட தேவனுடைய சித்தமாக இருந்திருக்கலாம்.[37] நாம் ஒரு ஆபத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகப் பொய் சொல்வது தேவனுடைய பார்வையில் சரியான காரியம் அல்ல. உண்மை பேசுவதன் மூலம் நமக்குத் தீமை ஏற்படுமானால், அத்தீமையை அனுபவிப்பதே தேவனுடைய பார்வையில் உயர்வானதாக உள்ளது (1பேது.2:20).[38] எனவே, நாம் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும் பொய்சொல்லக்கூடாது. எத்தகைய நெருக்கடியான நிலைமையிலும், சகலமும் தேவனுடைய கட்டப்பாட்டின் கீழேயே இருக்கின்றது என்பதை அறிந்தவர்களாக,[39] தேவன் நம்மைப் பார்த்துக் கொள்வார் என்னும் நம்பிக்கையுடன் நாம் எப்பொழுதும் உண்மை பேசுகிறவர்களாகவே இருக்க வேண்டும். "ஒருவருக்கொருவர் பொய்சொல்லாதிருங்கள்" (கொலோ.9) என்றே தேவன் அறிவுறுத்தியுள்ளார். உண்மையில், பிசாசே பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயி இருக்கின்றான் (யோவா.8:44). யோவான் 8:44ல் பொய் சொல்பவர்களை இயேசுகிறிஸ்து பிசாசின் பிள்ளைகள் என்றே குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்றமையால், எப்பொழுதும் உண்மை பேசுகிறவர்களாக இருக்கவேண்டும்.

தேவன் ராகாபினுடைய பொய்யை எவ்விதத்திலும் அங்கீகரிக்கவில்லை. தேவன் அவளது விசுவாசத்தையே கனப்படுத்தினார்.[40] எனினும், "அவள் இஸ்ரவேல் மக்களின் தேவனை விசுவாசித்தமையால் அவளது பொய் தேவனால் மன்னிக்கப்பட்டுள்ளது"[41] என்பதை மறுப்பதற்கில்லை. "ராகாப் வேவுகாரரைக் காப்பாற்றியது அவள் தேவனை விசுவாசித்துள்ளதை அறியத்தரும் செயலாக இருந்தாலும், அவள் கையாண்ட முறை தவறானதாகவே உள்ளது. எனினும், அவளது விசுவாசம் காரணமாக தேவனுடைய கிருபை அவளது பாவத்தை மன்னித்துவிட்டது."[42] யோசுவா 2:9-10 அறியத்தருவது போல, எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த இஸ்ரவேல் மக்களின் வனாந்திரப் பிரயாண சம்பவங்களை ராகாப் கேள்விப்பட்டிருந்தாள். இதனால் அவர்கள் எரிகோவையும் கைப்பற்றிவிடுவார்கள் என்பதில் அவளுக்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. இஸ்ரவேலர் மூலமாகத் தன் நாட்டுக்கும் குடும்பத்திற்கும் வரவிருக்கும் அழிவைப் பற்றி அறிந்து கொண்ட ராகாப், அதிலிருந்து தன்னையும் தன் குடும்பத்தினரையும் காப்பாற்றுவதற்காக அவள் இஸ்ரவேல் மக்களின் தேவனை விசுவாசித்தவளாக,

---

36 Bible Knowledgs, p. 331. அரசனால் அனுப்பப்பட்டவர்கள் ராகாபின் வாத்தைகளை உடனடியாக நம்பியவர்களாக, அவளது வீட்டைச் சோதனையிடாமல் சென்றது, அச்சமயம் தேவனுடைய பாதுகாப்பு வேவுகாரர்களுக்கு இருந்துள்ளதற்கான ஆதாரமாகக் கருதப்படுகின்றது (M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p. 71).

37 J.J.Davis & J.C.Whitcomb, *Israel from Conquest to Exile: A Commentary on Joshua – 2Kings*, p. 35.

38

39 தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாகவே நடைபெறுகின்றது என்று ரோமர் 8: கூறுகிறது.

40 புதிய ஏற்பாட்டில் ராகாபின் விசவாசம் புகழப்பட்டுள்ளதே தவிர, வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலும் ராகாபின் பொய் கண்டிக்கப்படவில்லை. இதனால் பொய் சொல்லாம் என்று நாம் கருதலாகாது.

41 R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 86.

42 C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 35.

அவருடைய ஜனங்களின் வேவுகாரருக்கு உதவுவதற்காக தன் நாட்டு அரசனிடமிருந்து வந்த மனிதர்களிடம் பொய்சொல்லி அவர்களை ஏமாற்றினாள். தேவன் ராகாபின் பொய்யை மன்னித்து, அவளது விசுவாசத்தைக் கனப்படுத்தியமையினால், விசுவாச வீரர்களின் பட்டியலில் அவளது பெயர் இடம்பெற்றுள்ளது.

உண்மையில், தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செய்தவற்றைக் கேள்விப்பட்டதே ராகாப் தேவனை விசுவாசிப்பதற்குக் காரணமாய் இருந்ததை யோசுவா 2ம் அதிகாரத்தில் 9ம் 10ம் வசனங்கள் அறியத்தருகின்றன.[43] அக்காலத்தில் யுத்தத்தில் வெற்றிபெறும் மக்களுடைய தேவன் அதிக வல்லமையுடையவர் என்னும் கருத்து மக்கள் மத்தியில் இருந்தது.[44] இதனால் ராகாபும், இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதல் அவர்களுக்கு மற்ற ஜாதியினர் மீது கிடைத்த வெற்றிகளைப் பற்றி கேள்விப்பட்டமையால், இஸ்ரவேல் மக்களுடைய தேவன் தங்களது தெய்வங்களைவிட அதிக வல்லமை உள்ளவர் என்பதை நம்பியவளாக, இஸ்ரவேல் மக்கள் மூலம் தனது நாட்டுக்கு வரவிருக்கும் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக தேவனை விசுவாசிக்கத் தொடங்கினாள். இதேவிதமாக, வேதாகமத்தில் தம்மை மனுமக்களுக்கு வெளிப்படுத்தியுள்ள தேவனே சர்வவல்லமையுள்ள மெய்யான தெய்வம் என்பதை அறிந்தவர்களாக, உலகின் மீது வரவிருக்கும் தேவதண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காக நாம் ஒவ்வொருவரும் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வுலகம் ஒருநாள் அழிந்து போகும் என்று வேதம் கூறுகிறது (2பேது.). வரவிருக்கும் இவ்வழிவிலிருந்து இயேசுகிறிஸ்துவினால் மட்டுமே மக்களைக் காப்பாற்ற முடியும் என்பதையும் வேதாகமம் அறியத்தருகின்றது. எனவே, இன்றே உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை நம்முடைய வாழ்வின் தெய்வமாக ஏற்றுக்கொள்வோமாக.

---

43 இவ்வசனங்கள் இரண்டாம் அத்தியாயத்தில் விரிவாக ஆரயப்பட்டுள்ளன.
44

## 2. அவள் ஒரு விசுவாசமகள்

எரிகோ என்னும் பட்டணத்தில் வாழ்ந்து வந்த ராகாப் என்பவள் ஒரு விலைமகளாக இருந்த போதிலும், அவள் இஸ்ரவேல் மக்களின் தேவனை விசுவாசித்த பெண்ணாகவும் இருந்தாள். அவள், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே உண்மையான தேவன் என்பதை அறிந்தவளாக (யோசு.2:11), அவரை விசுவாசித்தாள் (எபி.11:31). இஸ்ரவேல் மக்கள் தனது நாட்டை எப்படியும் கைப்பற்றிவிடுவார்கள் என்பதை அவள் அறிந்திருந்தமையால், வரவிருக்கும் யுத்ததத்தின் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு, இஸ்ரவேல் மக்களின் தேவனை விசுவாசிப்பதைத் தவிர வேறு வழிகள் எதுவும் இல்லை என்பதை அவள் நன்கறிந்திருந்தாள். யுத்ததத்தின் அழிவிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகவே ராகாப் தேவனை விசுவாசித்த போதிலும், அவளது விசவாசம் நிஜமானதாக இருந்தது. ராகாப் வேவுகாரரைத் தன் வீட்டில் ஒளித்து வைத்த செயல், அவள் தனது உயிரையே பணயம் வைத்து செய்த செயலாகும். வேவுகாரர்களை அவள் ஒளித்து வைத்திருப்பது அரசனால் அனுப்பப்பட்டவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டால் அது தேசத்துரோகச் செயலாகக் கருதப்பட்டு அவளுக்கு மரண தண்டனையே கிடைத்திருக்கும். எனவே ராகாப் தன்னுடைய தேவைக்காக மட்டும் தேவனை விசுவாசிப்பவளாக இருக்கவில்லை. இஸ்ரவேல் மக்களின் தேவனே மெய்யான தெய்வம் என்பதை அவள் அறிந்துள்ளதை யோசுவா 2:11 அறியத்தருகின்றது. இதனால், அவருக்காகத் தன் உயிரையே பணயம் வைக்கும் அளவிற்கு அவர் மீது அவளுக்கு விசுவாசம் இருந்தது. இதனால்தான் விசுவாச வீரர்களைப் பற்றிய புதிய ஏற்பாட்டு விவரணப் பட்டியலில் ராகாபின் பெயரும் இடம்பெற்றுள்ளது. ராகாபைப் போலவே நம்முடைய விசுவாசமும் நிஜமானதாக இருக்க வேண்டும். நமது தேவைகளுக்காக மட்டும் அவரை விசுவாசிப்பவர்களாக நாம் இருக்கக்கூடாது. அவரே உண்மையான தெய்வம் என்பதை அறிந்துகொள்வதனால் நாம் அவரிடம் வரவேண்டும். ராகாப் தன் சொந்த நாட்டுக்கு எதிராக, எதிரி நாட்டு வேவுகாரருக்கு அடைக்கலமளித்தமைக்கான காரணங்கள் இவ்வத்தியாயத்தில் ஆராயப்பட்டுள்ளது.

### 1.ராகாப் அறிந்திருந்த விடயங்கள்

விலைமகளான ராகாப், ஒரு விசுவாசப் பெண்ணாக மாறி இஸ்ரவேலின் வேவுகாரருக்கு அடைக்கலமளித்தமைக்குக் காரணம், அவள் இஸ்ரவேல் மக்களைப் பற்றியும், அவர்களுடைய தேவனைப் பற்றியும் அறிந்திருந்த விடயங்களேயாகும். விசுவாசம் தேவனுடைய வார்த்தையைக் கேட்பதனால் வரும் என்னும் வேத சத்தியத்தின்படி (ரோ.10:17), இஸ்ரவேல் மக்களுக்காகத் தேவன் செய்தவற்றைக் கேள்விப்பட்ட ராகாபின் உள்ளத்திலும் தேவன் மீது விசுவாசம் ஏற்பட்டது. இஸ்ரவேல் மக்களின் தேவன் அதிக வல்லமையுள்ளவரும், அற்புதங்களைச் செய்கிறவரும், உலக ராட்சியங்கதைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கும் தெய்வம் என்றும் ராகாப் விசுவாசித்தாள். யோசுவா 2:8-11ல் அவள் இதைப்பற்றி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளாள்

அந்த மனுஷர் படுத்துக் கொள்ளுமுன்னே, அவள் வீட்டின் மேல் அவர்களிடத்திற்கு ஏறிப்போய், கர்த்தர் உங்களுக்குத் தேசத்தை ஒப்புக்கொடுத் தாரென்றும், உங்களைப் பற்றி எங்களுக்குத் திகில் பிடித்திருக்கிறதென்றும், உங்களைக் குறித்து 'தேசத்துக் குடிகள்'[45] எல்லாரும் சோர்ந்து போனார்களென்றும் அறிவேன். நீங்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது, கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் 'சிவந்த சமுத்திரத்தின்'[46] தண்ணீரை வற்றிப் போகப் பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் 'சங்காரம் பண்ணின'[47] எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது, எங்கள் இருதயம் 'கரைந்து போயிற்று.'[48] உங்களாலே எங்கள் தைரியமும் அற்றுப் போயிற்று (யோசுவா 2:8-11அ).

ராகாபின் வார்த்தைகள், அவள் அறிந்திருந்த மூன்று முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டுகின்றன. முதலாவதாக, 8ம் வசனத்தில் அவள் குறிப்பிட்டுள்ளபடி, 'கர்த்தர் தன் நாட்டை இஸ்ரவேல் மக்களுக்குக் கொடுத்துள்ளார்' என்பதை அவள் அறிந்திருந்தாள். இஸ்ரவேல் மக்கள் இன்னும் யோர்த்தான் நதியைக் கடந்து எரிகோவிற்கு வரவில்லை. அப்படியிருந்தும், இஸ்ரவேலர்கள் எரிகோவைக் கைப்பற்றி விட்டதாகவே ராகாப் எண்ணினாள். இஸ்ரவேலரைக் குறித்து எரிகோவின் மக்களுக்கு இருந்த பயமும் சோர்வும் அவள் அறியாதவைகள் அல்ல. இஸ்ரவேல் மக்கள் வாக்குத்தத்த பூமிக்கு வரும்போது, அவர்களைப் பற்றியும் அவர்களுடைய தேவனைப் பற்றியும் மற்றவர்களுக்குப் பயம் ஏற்படும் என்று தேவன் யாத்திராகமம் 23:27லும், உபாகமம் 2:25லும் முன்னறிவித்தவை நிறைவேறியுள்ளதையே ராகாபின் வார்த்தைகள்

---

45 இவ்வசனத்தில் "தேசத்துக் குடிகள்" என்பது நாட்டின் ஆட்சியாளர்களையே குறிக்கின்றது. இஸ்ரவேல் மக்களது யுத்த வெற்றிகளைக் கேள்விப்பட்ட கானானியப் பட்டண அரச அதிகாரிகள் அனைவரும், தங்களால் இஸ்ரவேல் மக்களை யுத்தத்தில் ஜெயிக்கமுடியாது என்பதை அறிந்து கொண்டது அவர்களுக்கு சோர்வை ஏற்படுத்தியிருந்தது (N.K.Gottwald, *The Tribes of Yahweh: A Sociology of the Religion of Liberated Israel 1250-1050 BCE*, pp. 512-534; London: SCM Press, 1980; R.G.Boling & G.E.Wright, *Joshua: Anchor Bible Commentary*, p. 146. Garden City: Doubleday, 1982). எனினும், இவ்வசனங்களில் "நாங்கள்" "எங்கள்" என்னும் பதங்கள் எரிகோ நகர மக்கள் அனைவரையும் குறிக்கும் விதத்திலேயே உபயோகிக்கப்பட்டுள்ளது (R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 88).

46 பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் சிவந்த சமுத்திரம் எது என்பது பற்றி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. இன்று பெரும்பாலான வேத ஆராய்ச்சியாளர்கள் "சிவந்த சமுத்திரம்" என்னும் பெயர் தவறானது என்றே கூறுகின்றனர். இது கிரேக்க மற்றும் லத்தீன் மொழிபெயர்ப்பகளினால் ஏற்பட்ட தவறு என்றும், "நாணற் சமுத்திரம்" என்று கூறப்படும் கடலையே இஸ்ரவேல் மக்கள் கடந்தனர் என்று கூறுகின்றனர். எனினும் இத்தகைய விளக்கம், மிகவும் ஆழமானதும் அகலமானதுமான சிவந்த சமுத்திரத்தை இஸ்ரவேலர்கள் கடந்திருக்க முடியாது என்னும் கருத்தின் அடிப்படையில் உருவான ஒரு விளக்கமாகவே உள்ளது. ஆங்கிலத்தில் Reed sea என்று எழுதப்படவேண்டியது ஒரு எழுத்து தவறவிடப்பட்டு Red sea என்று எழுதப்பட்டுவிட்டதனால், இஸ்ரவேல் மக்கள் தற்கால சூயஸ் கால்வாயின் தென்பகுதியில் உள்ள கடலையே கடந்து சென்றனர் என்று தவறான கருத்து உருவாகியுள்ளதாகக் கூறுகின்றனர்.

47 இவ்வசனத்தில் "சங்காரம் பண்ணுதல்" என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம் மூலமொழியில், ('ஹேரெம்' *herem* என்னும் எபிரேயப் பதம்), யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட நகரத்தில் உள்ள அனைத்தையும் தெய்வத்திற்கு அர்ப்பணிப்பதற்காக அவற்றை சுட்டெரிப்பதைக் குறிப்பிட உபயோகிக்கப்படும் வார்த்தையாகும் (D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 262).

48 திருவிவிலியத்தில் இப்பதம் "கலக்கமுற்றது" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. எனினும், இதயம் கரைந்து போகுதல் என்பது, இதயம் நம்பிக்கையற்று, திடனற்றுப் போவதைக் குறிக்கும் விவரணமாகவே உள்ளது. நியாயாதிபதிகள் 7:5ல் "இருதயம் கரைந்து தண்ணீராய்ப் போயிற்று" என்னும் சொற்பிரயோகம் இவ்வித அர்த்தத்துடனேயே உள்ளது. (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 36)

அறியத்தருகின்றன. உண்மையில், தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செய்த காரியங்களே அவர்களைப் பற்றிய பயத்தை மற்றவர்களில் ஏற்படுத்தியிருந்தது. இதனால் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் தன் நாட்டைக் கொடுப்பார் என்று ராகாப் நம்பினாள். தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செய்த காரியங்கள் எரிகோ நகர மக்களுக்குப் பயத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும், ராகாபின் உள்ளத்தில் விசுவாசத்தை ஏற்படுத்தியிருந்தது. இதேவிதமாக, தேவன் செய்கின்ற காரியங்களைக் காணும் போதும், அவற்றைக் கேள்விப்படும் போதும் நமக்கும் அவர் மீது விசுவாசமும் நம்பிக்கையும் ஏற்பட வேண்டும்.

இரண்டாவதாக, இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து பறப்பட்டபோது, தேவன் எவ்விதமாகச் சிவந்த சமுத்திரத்தினூடாக அவர்களை வழிநடத்தி வந்தார் என்பதையும் ராகாப் அறிந்திருந்தாள். இதனால்தான் அவள் 10ம் வசனத்தில், ‘‘காத்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப் போகப் பண்ணினதையும் கேள்விப்பட்டோம்’’ என்று அவள் கூறினாள். யாத்திரகமம் 13:17-14:31ல் குறிப்பிடப்பட்டுள்ள இச்சம்பவம் நடந்து நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, அந்த நாற்பது வருடங்களாகக் கானான் தேசத்தில் இருந்தவர்கள் இஸ்ரவேலரைப் பற்றிய பயத்துடனேயே இருந்துள்ளனர்.[49] இதை ராகாப் அறிந்திருந்தாள். இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்ததைக் கேள்விப்பட்டவர்கள் அனைவரும் அவர்களை எவராலும் எதிர்க்க முடியாது என்பதை அறிந்து சோர்வும் பயமும் அடைந்தார்கள். உண்மையில், இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்து வந்ததை எரிகோ நகர மக்கள் நாற்து வருடங்களாக நினைவில் வைத்திருந்தது கிறிஸ்தவர்களாகிய நாம் வெட்கப்படவேண்டிய ஒரு விடயமாகவே உள்ளது. ஏனெனில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில், தேவன் நேற்று நம் வாழ்வில் செய்தவற்றை இன்று மறந்துவிடுகிறவர்களாகவே நாம் இருக்கின்றோம். ஆனால், சங்கீதம் 103:2 அறியத்தருவதுபோல, தேவன் நம் வாழ்வில் செய்த காரியங்களை நாம் எப்பொழுதும் நம் நினைவில் வைத்திருக்க வேண்டும். தேவன் மீதிருக்கும் நமது விசுவாசம் தளர்ந்து போகாமல் எப்பொழுதும் உறுதியுடன் இருப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

மூன்றாவதாக, அண்மையில் இஸ்ரவேல் மக்கள் யோர்தான் நதிக்குக் கிழக்குப் பக்கத்தில் உள்ள எமோரியர்களின்[50] இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் ராகாப் கேள்விப்பட்டிருந்ததையும் 10ம் வசனம் அறியத்தருகின்றது.

---

[49] இந்த 40 வருடங்களும் கானானியர்கள் மனந்திரும்பி தேவிடம் வருவதற்கு அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கால அவகாசமாகவும் இருக்கின்றது. பழைய ஏற்பாட்டில் பல ராட்சியங்களைத் தேவன் அழித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், தேவனுடைய இச்செயல் கொடியது என்று தர்க்கிப்பது அர்த்தமற்றது. மக்கள் மந்திரும்புவதற்குப் போதிய கால அவகாசம் கொடுத்து, அவர்கள் மனந்திரும்பாதபோதே அவர்களைத் தேவன் தண்டித்துள்ளார். தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செய்த காரியங்கள் அனைத்தையும் கானானியர்கள் கேள்விப்பட்டிருந்தும், அவர்கள் மனந்திரும்பி தேவனிடம் வரவில்லை. (J.V.McGee, *Joshua and Judges*, pp. 21-22).

[50] எமோரியர் என்னும் பதம் ஆதியாகமம் 10ம் அதிகாரத்திலுள்ள வம்சவரலாற்று அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (ஆதி.10:16). ஆதியாகமம் 15:16ல் இப்பதம் கானானியக் குடிமக்கள் அனைவரையும் குறிப்பிடும் விதத்தில் உபயோகிக்கப்பட்டுள்ளது. ஆனால் யோசுவாவின் புத்தகத்தில் யோர்தான் நதிக்குக் கிழக்கில் இருந்த நாடுகளையே குறிக்கின்றன (யோசு.9:10, 24:8).

இஸ்ரவேல் மக்கள், எமோரியரின் தேசத்தின் வழியாகச் செல்வதற்கு அனுமதி கேட்டபோது, அதன் அரசனாகிய சீகோன் அவர்களுக்கு அனுமதி கொடுக்க மறுத்ததோடு, அவர்களோடு போரிட வந்தான். அச்சந்தர்ப்பத்தில் இஸ்ரவேலர்கள் எமோரிய அரசனை முறியடித்து, அந்நாட்டைக் கைப்பற்றினார்கள் (எண்.21:21-16), அதேபோல, பாசானின் ராஜாவாகிய ஓக் என்பனையும் அவனுடைய நாட்டு மக்களையும் இஸ்ரவேலர்கள் மக்கள் அழித்தனர் (எண்.21:32-35). இவற்றைக் கேள்விப்பட்ட எரிகோ பட்டணத்தினர், இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய நாட்டுக்கு வந்தால், தங்களுக்கு என்ன நடக்குமோ என்னும் பயத்துடனேயே இருந்தனர். இஸ்ரவேல் மக்கள் தன்னுடைய நாட்டைக் கைப்பற்றிவிடுவார்கள் என்பதில் ராகாபிற்கு எவ்வித சந்தேகமும் இருக்கவில்லை. எமோரியரின் ராஜாக்களுக்கு நடந்தது போலவே எரிகோவின் அரசனுக்கும் அழிவு வரும் என்பதை ராகாப் அறிந்திருந்தாள். இஸ்ரவேல் மக்களுடைய தேவன் அவர்களுக்காக எவ்விதமாகச் செயல்பட்டாரோ, அதேவிதமாக தொடர்ந்தும் செயல்படுவார் என்று அவள் நம்பினாள். இதனால் அவள் இஸ்ரவேல் மக்களுடைய தேவனை விசுவாசிக்கத் தொடங்கினாள். இதேவிதமாக, தேவன் ஏற்கனவே நம் வாழ்வில் செய்த காரியங்களை நினைவுகூரும் நாம், தேவன் தொடர்ந்தும் அதேவிதமாக நம்வாழ்வில் செயல்படுவார் என்பதையும் நாம் மறக்கலாகாது.

## 2. ராகாபின் அகத்திலிருந்த விசுவாசம்

தேவன் இஸ்ரவேல் மக்களுக்காகச் செய்தவற்றைக் கேள்விப்பட்ட ராகாபின் உள்ளத்தில், இஸ்ரவேல் மக்களின் தேவனே உண்மையான தெய்வம் என்னும் விசுவாசம் ஏற்பட்டிருந்தது. யோசுவா 2ம் அதிகாரம் 11ம் வசனத்தில் அவள் குறிப்பிட்டுள்ளவை அதை அறியத்தருகின்றது:

> உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர் என்றாள் (யோசுவா 2:11ஆ).

தேவன் எப்படிப்பட்டவர் என்பதை இஸ்ரவேல் மக்கள் அறிந்து கொள்ளவேண்டிய விதமாக (உபா.4:39), ராகாப் தேவனை அறிந்து கொண்டாள் என்பதை அவளது வாத்தைகள் அறியத்தருகின்றன.[51] தான் அதுவரை காலமும் வழிபட்டு வந்த கானானிய தெய்வங்கள் அல்ல, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே உண்மையான தெய்வம் என்பதை ராகாப் விசுவாசித்தாள். பலதெய்வ வழிபாடுள்ள இடத்தில் பிறந்து வளர்ந்த ராகாப், இஸ்ரவேல் மக்களின் தேவனே உலகிலிருக்கும் ஒரேயோரு தேவன் என்பதை அறிந்து கொண்டாள். மேலும், அவர் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்கு மட்டும் தேவன் அல்ல முழுஉலகிற்கும் தேவன் என்பதாகவும் அவள் அறிக்கையிட்டாள். உண்மையில், தேவன் இஸ்ரவேல் மக்களுக்குத் தன் தேசத்தைக் கொடுத்துள்ளார்

[51] தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து விடுவிப்பதற்காகச் செய்த செயல்கள் எத்தகைய விளைவை எகிப்தியரில் ஏற்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்த்தாரோ (யாத்.7:5), அத்தகைய விளைவு ராகாபினுடைய உள்ளத்தில் ஏற்பட்டிருந்தது (D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 262).

என்னும் அவளது விசுவாசம் (யோசு.2:9), அவரே முழு உலகின் மீதும் அதிகாரமுடைய தேவன் என்னும் உண்மையை அவளுக்கு காண்பித்திருந்தது.

ராகாபைப் போலவே, இன்றும் மக்கள் ஒவ்வொருவரும் தேவனைப் பற்றி அறிந்து அவரிடம் தங்களுடைய வாழ்வை அர்ப்பணிக்கவேண்டியது அவசியம். ஏனெனில், வேதாகமத்தில் தம்மை மக்களுக்கு வெளிப்படுத்தியுள்ள தேவனே, இப்பிரபஞ்சத்தில் இருக்கும் ஒரேயொரு தெய்வம். ஏனைய மதத் தெய்வங்கள் எல்லாம் தேவர்கள் என்று பெயர் பெற்றிருந்தாலும், அவைகள் உண்மையான தெய்வங்கள் அல்ல. இதனால்தான், பலவிதமான விக்கிரகங்களை வழிபட்ட வந்த புறஜாதி மக்கள், இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு முன்னர் "தேவனற்றவர்களாக" இருந்தார்கள் என்னும் உண்மையைப் பவுல் எபேசியர் 2:12ல் அறியத்தந்துள்ளார்.[52] இஸ்ரவேல் மக்கள் மத்தியில் அன்று செயல்பட்ட தேவன் இன்று இயேசுகிறிஸ்து என்னும் பெயரில் உலக மக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தியுள்ளார். அவரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனாக இருக்கின்றார் என்பதை பிலிப்பியர் 2:10-11 கொலோசெயர் 1:15-18 பொன்ற வசனங்கள் அறியத்தருகின்றன. கானானிய தெய்வ வழிபாடுகள் நடைபெறும் பிரதேசத்தில் வாழ்ந்த ராகாப், உண்மையான தேவனை அறிந்து கொண்டது போல, இன்று, பல்தெய்வ வழிபாடுகள் உள்ள நாட்டில் வாழும் நாமும், மெய்யான தேவனாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, அவரை நம்முடைய வாழ்வின் தெய்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

## 3. ராகாபின் அபயமிடும் விண்ணப்பம்.

இஸ்ரவேல் மக்கள் தன் நாட்டைக் கைப்பற்றி, தன் நாட்டு மக்களை அழித்துவிடுவார்கள் என்பதை நன்கறிந்திருந்த ராகாப், அவர்கள் தன் நாட்டை ஆக்கிரமிக்கும் போது, தன்னையும் தன் குடும்பத்தினரையும் அழிக்காமல் காப்பாற்றும்படி இஸ்ரவேலின் வேவுகாரரிடம் அபயமிட்டாள். தான் இஸ்ரவேலின் வேவுகாரரை ஒளித்தவைத்து அவர்களைக் காப்பாற்றியமையால், அதற்குப் பதிலாக, வரவிருக்கும் யுத்த அழிவிலிருந்து தன்னையும் தன் குடும்பத்தினரையும் காப்பாற்றும்படி அவள் மன்றாடினாள். யோசுவா 2ம் அதிகாரம் 12ம் 13ம் வசனங்களில் அவள் இதைப் பற்றி பின்வருமாறு வேவுகாரரிடம் கூறினாள்,

> இப்போதும் நான் உங்களுக்குத் 'தயவு'[53] செய்தபடியினால் நீங்களும் என் 'தகப்பன் குடும்பத்துக்குத்'[54] தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு

---

[52] தேவனற்றவர்கள் என்பதற்கு பவுல் மூலமொழியில் உபயோகித்துள்ள "ஏதியோய்" (*atheoi*) என்னும் கிரேக்க பதம், புறஜாதியர் பல தெய்வங்களை வழிபட்டு வந்த போதிலும், அவர்கள் உண்மையான தேவனைப் பற்றிய அறிவற்றவர்களாக இருந்தார்கள் என்பதையே அறியத்தருகின்றது (F.Foulkes, *Ephesians, Tyndale New Testament Commentaries*, p. 88). அவர்கள் பல தெய்வங்களை வழிபட்டு வந்த போதிலும், உண்மையான தேவன் அவர்களின் வழிபாட்டில் இருக்கவில்லை (A.T.Lincoln, *Ephesians: Word Biblical Commentary Volume 42*, p. 138).

[53] இவ்வசனத்தில் "தயவு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பதம், (ஹெஸ்செட் *hesed* என்னும் எபிரேயப் பதம்) மூலமொழியில் உதவிசெய்வதன் மூலம் காண்பிக்கப்படும் அன்பைக் குறிக்கும். தேவன் இஸ்ரவேல் மக்களோடு செய்து கொண்ட உடன்படிக்கையோடு தொடர்புடைய இப்பதம் பழைய ஏற்பாட்டில் ஏறக்குறை 250 தடவைகள் வாக்குத்தத்தை அல்லது உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறுதிமிக்க அன்பைக் குறிக்கும் விதத்தில் உபயோகிக்கப்பட்டள்ளது (ஆதி.24:12, யாத்.20:6,

ஆணையிட்டு, நீங்கள் என் தகப்பனையும் என் சகோதரரையும், என் சகோதரிகளையும், அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி எனக்கு நிச்சயமான 'அடையாளத்தைக்'[55] கொடுக்க வேண்டும் என்றாள் (யோசுவா 2:12-13).

ராகாப் ஒரு விலைமகளாக இருந்த போதிலும், அவள் தன் உறவினர்கள்மீது அன்புள்ளவளாக இருந்தாள். இதனால்தான், தன்னை மட்டுமல்ல, தன் பெற்றோரையும், சகோதர சகோதரிகளையும் காப்பாற்றும்படி வேவுகாரரிடம் அபயமிட்டாள்.[56] இன்று, பெற்றோரையும் உடன் பிறந்தோரையும் நேசிக்காமல், தங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் சுயநலமான மக்களை நாம் அனுதினமும் சந்திக்கின்றோம். ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இவ்வாறு இருக்கக்கூடாது. நான் மட்டும் இரட்சிக்கப்பட்டால் போதும், எனக்கு மட்டும் தேவ ஆசீர்வாதம் கிடைத்தால் போதும் என்று எண்ணும் மக்களாக நாம் இருக்கக் கூடாது. ராகாபைப் போல நம் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும் தேவனால் மீட்கப்படவேண்டும் என்னும் சிந்தை நமக்கு இருக்க வேண்டும். குடும்பமாகத் தேவனை சேவிக்க வேண்டும் என்னும் வாஞ்சையுடையவர்க ளாக (யோசு.24:15) நம் குடும்பத்தில் இன்னும் தேவனை அறியாதவர்கள் எவராவது இருப்பார்கள் என்றால், அவர்களது இரட்சிப்பிற்காக நாம் தேவனிடம் மன்றாடுகிறவர்களாக இருக்க வேண்டும்.

---

உபா.5:10, நியா.1:22-26, எரே.32:18 G.R.Clark, *The Word 'Hesed' in the Hebrew Bible,* pp. 73-75) Sheffield: JSOT Press, 1993.

54 "தகப்பன் குடும்பம்" என்பது ஒருவனது பெற்றோரையும், அவனது சகோதர சகோதரிகளின் குடும்ப அங்கத்தினர் அனைவரையும் உள்ளடக்கியதாகும். அக்காலத்தில் மக்கள் கூட்டுக்குடும்பமாக வாழும் முறையே இருந்தமையால், இவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் அல்லது பலவீடுகள் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ள வீட்டுத்தொகுதியிலேயே வாழ்வது வழமை. இத்தகைய புராதன வீட்டுத்தொகுதிகள் பலவற்றைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் (L.E.Stager, "The Archaeology of the Family in Ancient Israel" pp. 18-23). எனினும் ராகாப் விபசாரியாக இருந்தமையால் தனியாக ஒரு வீட்டில் வாழ்ந்து வந்திருக்கலாம்.

55 தன் குடும்ப அங்கத்தினர்கள் அனைவரையும் காப்பாற்றுவதாக ஆணையிடும்படி ராகாப் கேட்டதே அவள் வேவுகாரரிடமிருந்து எதிர்பார்த்த அடையாளமாகும் (R.Hess, *Joshua, Tyndale Old Testament Commentaries,* p. 90). மேலும், "அக்காலத்தில் உத்தியோகபூர்வமாகச் செய்யப்படும் ஆணை ஒருவருக்குக் கொடுக்கப்படும் அடையாளமாகவெ இருந்தது" (M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament,* p. 73). ஆணையிடுவது நிச்சயமாக நிறைவேற்றுவதைப் பற்றி கொடுக்கும் உறுதிமொழியாகும். எனவே வேவுகாரரின் ஆணை ராகாபுக்கு நிச்சயமான அடையாளமாகவே இருக்கும் (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament,* p. 37). சில வேத ஆராய்ச்சியாளர்கள் ராகாப் கேட்ட ஆணையை, அக்காலத்தில் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கையாகக் கருதுகின்றனர் (K.M.Campbell, "Rahab's Covenant" in *Vetus Testamentum.* 22 (1972), pp. 243-244). இவ்வுடன்படிக்கை ராகாப் ஒரு இஸ்ரேலியப் பெண்ணாக மாறுவதையும் உள்ளடக்கியிருந்ததாகவும் இவர்கள் கருதுகின்றனர் (R.Hess, *Joshua, Tyndale Old Testament Commentaries,* p. 92). ஆனால் இது மிகைப்படுத்தப்பட்ட ஒருவிளக்கமாகவே இருக்கின்றது. மேலும், ராகாப் இஸ்ரேலியப் பெண்ணாக மாறும் சடங்காசார செயல்முறை, இஸ்ரவேல் மக்கள் எரிகோவைக் கைப்பற்றிய பின்பே நடைபெறுவதாக யோசுவா 6 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

56 ராகாப் தன் குடும்ப அங்கத்தினர் அனைவருக்காகவும் வேவுகாரரிடம் பேசுவதனால், அவளது குடும்பத்தில் வழமையாக ஒரு விபசாரிக்கு கொடுக்கப்படும் அந்தஸ்தைவிட உயர்வான அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளதாக சில வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் (D.J.Wiseman, "Rahab of Jericho" in *Tyndale Bulletin.* 14 (1964), p. 8). எனினும் இவர்கள் பொதுவாக ராகாபை ஒரு விபசாரி என்று ஏற்றுக்கொள்வதில்லை. இதனால், ராகாபின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டு, அவளது குடும்ப அந்தஸ்தை முழுமையாக அறிந்து கொள்ள முடியும் என்று கூறுவதற்கில்லை.

# 3.அவள் ஒரு விமலமகள்

எரிகோ என்னும் நகரில் ஒரு விலைமகளாக இருந்த ராகாப், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தம்முடைய மக்களுக்காகச் செய்தவற்றைக் கேள்விப்பட்டு, அவரை விசுவாசித்தமையால் அவள் ஒரு விமலமகளாக (அதாவது தூய்மையானவளாக) மாறினாள். விபசாரம் தேவனுடைய ஒழுக்க விதிமுறைகளுக்கு விரோதமான பாவம் என்பது உண்மை என்றாலும் (யாத்.20:14), அப்பாவத்திற்கும் தேவனிடத்தில் மன்னிப்பு உண்டு என்பது வேதத்தின் தெளிவான போதனையாகும். விபசாரம் செய்த பலர், இயேசுகிறிஸ்துவிடத்தில் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, அதற்கான மன்னிப்பைப் பெற்று, தேவனுடைய பிள்ளைகளாகியுள்ளனர் (1கொரி.6:9-11).[57] விபசாரத்தில் பிடிபட்டு, யூதமார்க்கத்தவர்களினால் குற்றவாளியாகக் கருதப்பட்ட ஒரு பெண்ணை இயேசுகிறிஸ்து மன்னித்ததைப் பற்றி யோவான் 8ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கலாம்.[58] ஒருவன் எவ்வளவு கொடிய பாவியாக இருந்தாலும், அவன் இயேசுகிறிஸ்துவிடம் வரும்போது, தனது பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக் கொள்வதோடு (1யோவா.1:7),[59] தேவனுடைய பார்வையில் பரிசுத்தமானவனாகவும் கருதப்படுகின்றான் (1கொரி.1:2).[60] விலைமகளான ராகாபும், தேவனை விசுவாசித்தமையால், பாவங்கள் மன்னிக்கப்பட்டு பரிசுத்தமான பெண்ணாக மாறினாள். தேவனை விசுவாசித்த ராகாபுக்கு கிடைத்த ஆசீர்வாதங்களைப் பற்றி இவ்வத்தியாயத்தில் ஆராய்ந்து பார்ப்போம்.

## 1.ராகாபிற்கு கிடைத்த வாக்குத்தத்தம்

ராகாப் இஸ்ரவேலின் தேவனாகிய காத்தரை விசவாசித்தது மட்டுமல்ல, அவர் தன்னுடைய நாட்டை இஸ்ரவேலருக்குக் கொடுத்துவிடுவார் என்பதை நன்கறிந்திருந்தமையால் (யேசு.2:9), தன் வீட்டுக்கு வந்த வேவுகாரரிடம், தன்னையும் தன் குடும்பத்தினரையும் யுத்தத்தின் அழிவிலிருந்து தப்புவிக்கும்படி மன்றாடினாள் (யோசு.2:12-13). இஸ்ரவேலின் வேவுகாரர்களும், ராகாப் தங்களுக்கு எரிகோவின் அரசனிடமிருந்து பாதுகாப்பளித்தமையால், அவளையும் அவளது குடும்பத்தினரையும் யுத்தகாலத்தில் காப்பாற்றுவதாக வாக்களித்தனர். யோசுவா 2ம் அதிகாரம் 14ம் வசனத்தில் அவர்கள் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி, எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு. நீங்கள் எங்கள் காரியத்தை வெளிப்படுத்தாதிருந்தால், கர்த்தர்

---

[57] 1கொரிந்தியர் 6:9-10ல், விபசாரம் உட்பட சில பாவங்களைக் குறிப்பிடும் அப்போஸ்தலனாகிய பவுல், 11ம் வசனத்தில், "உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் காத்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்" என்று குறிப்பிடுவதிலிருந்து விபசாரம் செய்தவர்களையும் தேவன் மன்னித்து, பரிசுத்தமாக்கியுள்ளதை அறிந்து கொள்கின்றோம்.

[58] யோவான் 8:11ல் இயேசுகிறிஸ்து அப்பெண்ணிடம், "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை. நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே" என்று கூறினார்.

[59] "இயேசுகிறிதுவினுடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்" என்னும் உண்மையை 1யோவான் 1:7 அறியத்தருகின்றது.

[60] கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகவும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாகவும் இருப்பதாக 1கொரிந்தியர் 1:2 கூறுகிறது.

> எங்களுக்குத் தேசத்தைக் கொடுக்கும் போது, நாங்கள் தயையும் சத்தியமும் பாராட்டுவோம் என்றார்கள் (யோசுவா 2:14).

இஸ்ரவேலின் வேவுகாரர்கள், தங்கள் உயிரையே பணயமாக வைத்து, ராகாபையும் அவளது குடும்பத்தினரையும் பாதுகாப்பதாக வாக்களித்தனர். இதனாலேயே, “எங்கள் ஜீவனே உங்கள் ஜீவனுக்கு ஈடு” என்று அவர்கள் கூறினார்கள். இஸ்ரவேலின் வேவுகாரர் தனது கோரிக்கைக்கு இணங்கி, தன்னையும் தன் உறவினர்களையும் யுத்தத்தின் அழிவிலிருந்து பாதுகாப்பதாக வாக்களித்தமையால், ராகாபும், அவர்களைப் பாதுகாப்பாகத் தன்வீட்டிலிருந்து அனுப்பிவைத்தாள். யோசுவா 2ம் அதிகாரம் 14ம் 15ம் வசனங்களில் இதைப்பற்றி நாம் பின்வருமாறு வாசிக்கலாம்:

> அப்பொழுது அவர்களைக் கயிற்றினாலே ஜன்னல் வழியாய் இறக்கிவிட்டாள். ‘அவள் வீடு அலங்கத்தின் மதிலில் இருந்தது.’[61] அலங்கத்திலே அவள் குடியிருந்தாள். அப்பொழுது அவள் அவர்களை நோக்கி,[62] தேடுகிறவர்கள் உங்களைக் காணாதபடிக்கு நீங்கள் மலையிலே போய், அவர்கள் திரும்பிவருமட்டும் மூன்று நாள் ஒளிந்திருந்து,[63] பின்பு உங்கள் வழியே போங்கள் என்றாள் (யேசுவா 2:15-16).

ராகாப் இஸ்ரவேலின் வேவுகாரரை எரிகோவின் அரசனிடமிருந்து தப்புவித்த போதிலும், அவர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்து யுத்தத்தின் அழிவிலிருந்து அவளையும் அவளது உறவினர்களையும் பாதுகாப்பதாக வாக்களித்தமையால், அவர்கள் அவளுக்கு மூன்று நிபந்தனைகளை விதித்தனர். “இவைகள் ராகாபும் அவளது உறவினர்களும் தேவன் மீது வைக்கும் விசுவாசத்தை வெளிப்படுத்தும் செயல்களாகவே கொடுக்கப்பட்டுள்ளன.”[64] முதலாவதாக, இஸ்ரவேல் மக்கள் எரிகோவைக் கைப்பற்றி, அதை அழிக்கும் போது, அவளின் வீடு எது என்பதை இஸ்ரவேலர்கள் அறிந்து கொள்ளுவதற்காக, அவள் ஒரு அடையாளத்தைப்

---

[61] புராதன எரிகோ நகரில் இத்தகைய வீடுகள் இருந்துள்ளதை நகரின் சிதைவுகளில் இருந்து புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர் (B.G.Wood, “Did the Israelities Conquer Jericho” in *Biblical Archaeology Review*. pp. 44-59). அக்காலத்தில் எரிகோ நகரைச் சுற்றி 15 அடிகள் இடைவெளியில் இரண்டு மதிற்சுவர்கள் இருந்தன. இவ்விரு சுவர்களுக்கும் இடையில் மரப்பலகைகளைப் பொட்டு அதை அத்திவாரமாகக் கொண்டு வீடுகள் கட்டப்பட்டிருந்தன. ராகாபின் வீடும் இத்தகைய ஒரு வீடாகவே இருக்க வேண்டும் (D.K.Campbell, *Joshua: The Bible Knowledge Commentary*, p. 332).

[62] இதனைத் தொடர்ந்து வரும் வசனங்கள், ராகாப் வேவுகாரர்களை ஜன்னல் வழியாக இறக்கிவிட்ட பின்னர் ராகாபும் வேவுகாரர்களும் பேசியவையாகக் கருதுவது தவறாகும். 15ம் வசனம், சம்பவத்தின் இறுதி விடயத்தை முதலில் எழுதும் முறையின்படி எழுதப்பட்டுள்ளது (W.J.Martin, “Dischronologized Narrative in the Old Testament. in *Supplements to Vetus Testamentum*, pp. 179-186). மேலும், எபிரேயச் சரிதைகள் காலக்கிரம ஒழுங்கை அல்ல விடயங்களையே அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுபவை களாகும் (D.H.Madvig, *Joshua: The Expositor’s Bible Commentary Volume 3*, p. 263). எனவே, யோசுவா 2:16-20 ராகாபின் வீட்டுக்குள் நடந்த உரையாடலாகவே உள்ளது (R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 95).

[63] அரசனுடைய ஆட்கள் வேவுகாரரைத் தேடி யோர்த்தான் நதிப் புறமாகச் சென்றமையால், அவர்கள் அங்கிருந்து திரும்பி நகரத்திற்குள் வரும்வரைக்கும் ஒளிந்திருந்து, அதன் பின்னர் நதியைக் கடந்து செல்லும்படி ராகாப் அறிவுறுத்தியுள்ளாள். ராகாப் இவ்வசனத்தில் குறிப்பிடும் மலை எரிகோ நகரத்திற்கு வடக்கில் இருந்த மலையாகும் (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 38).

[64] D.H.Madvig, *Joshua: The Expositor’s Bible Commentary Volume 3*, p. 263.

போடவேண்டும். யோசுவா 2ம் அதிகாரம் 17ம் வசனத்தின் ஆரம்பப் பகுதியில் இதைப் பற்றி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

> அப்பொழுது அந்த மனுஷர் அவளை நோக்கி, இதோ, நாங்கள் தேசத்துக்குள் பிரவேசிக்கும் போது, நீ இந்த 'சிவப்பு நூல் கயிற்றை'[65] எங்களை இறக்கிவிட்ட ஜன்னலிலே கட்டிவைக்க வேண்டும் என்றார்கள் (யோசு.2:17ஆ).

---

[65] இந்த சிவப்பு நூல் கயிறு, வேவுகாரர்கள் தங்களிடம் வைத்திருந்த கயிறாக இருக்கலாம் (M.H.Woudstra, *Joshua: The New International Commentary on the Old Testament*, p. 75), அல்லது இதை அவர்கள் ராகாபின் வீட்டிலிருந்து எடுத்திருந்திருக்கலாம் (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 38). எனினும், இது, ராகாப் அவர்களை ஜன்னலினூடாக இறக்கிவிட உபயோகித்த கயிறாக இருக்கமுடியாது. ஏனெனில், மனிதர்களை இறக்கிவிடக்கூடிய அளவிற்கு தடிப்பான பெரிய கயிறு, எரிகோவின் படையினருக்கு சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாக அமைந்து விடும். எனவே, இது அவதானித்துப் பார்ப்பவர்களின் கண்களுக்கு மட்டுமே தென்படக்கூடிய ஒரு சிறிய கயிராகவே இருக்கவேண்டும்'' (H.L.Ellison, *Joshua – 2Samuel: Scripture Union Bible Studey Books*, p. 4). சில வேத ஆராய்ச்சியாளர்கள் இதை அவளது வீட்டு ஜன்னலில் ஏற்கனவே இருந்த ஒரு கயிறாக, அவளது வீடு ஒரு விபசாரியின் வீடு என்பதை மக்களுக்கு காண்பிக்கும் அடையாளமாக இருந்ததாகக் கருதுகின்றனர் (R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 94; P.Bird, "The Harlot as Heroine" p. 130). ஏசாயா 1:18ல் சிவப்பு நிறம் பாவத்திற்கும், உன்னதப்பாட்டு 4:3ல் பெண்ணின் உதடு சிவப்பு நூலுக்கும், ஒப்பிடப்பட்டிருப்பதையும், ஆதியாகமம் 38:28ல் மாமனாருக்கும் மருமகளுக்கும் இடைல் ஏற்பட்ட தவறான உறவில் பிறந்தவனுடைய கையில் சிவப்பு நூல் கட்டப்பட்டதையும் சுட்டிக்காட்டும் இவர்கள், பழைய ஏற்பாட்டில் சிவப்பு நூல் பாலியலுடனும் விபசாரத்துடனுமே தொடர்புடையதாக உள்ளது என்று கூறுகின்றனர் (F.A.Spina, "Rahab" in *The International Standard Bible Encyclopedia Volume 4*, p. 34). ஆனால், வேவுகாரர்கள் ஏற்கனவே இருந்த கயிற்றைப் பற்றி அல்ல, இனிமேல் கட்டப்படவேண்டிய கயிறைப் பற்றியே கூறுவதனால் இவ்விளக்கத்தை ஏற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. ஆதிசபைப்பிதாக்கள் இந்த சிவப்புக் கயிறை இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கான அடையாளமாகக் கருதினார்கள். இதனால், இஸ்ரவேல் மக்கள் எகிப்பிலிருந்து பறப்பட்டு வந்த நாளில் பஸ்கா ஆண்டின் இரத்தம் பூசப்பட்டிருந்த வீடுகளில் இருந்தவர்களுக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தாமல் சங்காரத் தூதன் அவ்வீடுகளைக் கடந்து சென்றது போல, பஸ்கா ஆடாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கு அடையாளமாயிருந்த சிவப்பு கயிறு இருந்த ராகாபின் வீடு யுத்த அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டது என்று தற்காலத்திலும் சில கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர் (F.A.Schaeffer, *Joshua and the Flow of Biblical History*, p. 71; A.C.Gaebelein, *The Annotated Bible: Volume 2 Joshuatp Chronicles*, p. 14; T.H.Epp, *Joshua – Victorious by Faith*, p. 97). ஆனால், இது பழைய ஏற்பாடு கிறிஸ்தவர்களுடைய நூல் என்பதை யூதர்களுக்கு நிருபிப்பதற்காக ஆதிச் சபைப்பிதாக்கள் கையாண்ட ஒரு வியாக்கியான முறையின்படி உருவாக்கப்பட்டுள்ள விளக்கமாக உள்ளதே தவிர ராகாப் தொங்கவிட்ட சிவப்பு கயிறு இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்று வேதாகமத்தில் எந்த ஒரு இடத்திலும் குறிப்படவில்லை. ஆதிசபைப் பிதாக்கள், பழைய ஏற்பாட்டில் சிவப்பு நிறத்தைப் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்று கூறினார்கள். எனினும் இது சரியான வேத வியாக்கியானம் அல்ல. ஏசாயா 1:18, உன்னதப்பாட்டு 4:3 போன்ற வசனங்களில் சிவப்பு நிறம் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம் அல்ல என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டள்ளது. எனவே, சிவப்பு நிறத்தைப் பற்றிய குறிப்புகள் அனைத்தையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தமாக விளக்குவது தவறாகும். ஆதிச் சபைப் பிதாக்கள் மோசேயின் காலத்தில் நைல் நதி இரத்தமாக மாறியதையும் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் என்றே கூறினார்கள். ஆனால், அது மக்களை இரட்சிக்கும் இயேசுகிறிஸ்துவின் இரத்தமாக அல்ல, எகிப்தியர் மீது வந்த தேவ தண்டனையாகவே உள்ளது. மேலும், யோசுவா 6ம் அதிகாரத்தின்படி, இஸ்ரவேல் மக்கள் ராகாப் தொங்கவிட்ட சிவப்பு நிறக் கயிறை ஆதாரமாகக் கொண்டு அவளுடைய உறவினர்களைக் காப்பாற்றவில்லை. வேவுகாரார் ராகாபைக் காப்பாற்றுவதாக வாக்களித்தபோது, வழமையான யுத்தமொன்றின் மூலமே எரிகோ ஆக்கிரமிக்கப்படும் என்னும் நம்பிக்கையிலேயே அவர்கள் ராகாபைக் காப்பாற்றுவதற்காக அவளது வீட்டை அறிந்து கொள்வதற்கு சிவப்பு நிறக் கயிறைத் தொங்கவிடும்படி கூறினார்கள். ஆனால், யோசுவா 6ம் அதிகாரத்தின்படி, வழமையான யுத்தத்தினால் அல்ல, தேவனுடைய அற்புதச் செயலினால் எரிகோவின் மதில் இடிந்து விழுந்ததினாலேயே இஸ்ரவேல் மக்கள் எரிகோவிற்குள் சென்றனர். எனவே, ராகாப் கட்டிய சிவப்பு நிறக் கயிற்றுக்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லாமற்போய்விட்டது. எனவே இதை இயேசுகிறிஸ்துவின் இரத்தத்திற்கான அடையாளமாகக் கருதுவது அர்த்தமற்றது. ராகாப் காப்பாற்றப்பட்டது சிவப்புக் கயிற்றினால் அல்ல, மாறாக, அவள் தேவனை விசுவாசத்தமையால் தேவனால் காப்பாற்றப்பட்டாள். தேவனுடைய செயலினால் எரிகோ நகரத்தின் மதிற்சுவர்கள் இடிந்து விழுந்தபோது, ராகாபின் வீடு இருந்த இடம் இடிந்து விழுவதற்கு இடம்கொடாத தேவன், அவளையும் அவளது உறவினர்களையும் இஸ்ரவேல் மக்களின் மூலமாகக் காப்பாற்றியுள்ளார். "மதிற்சுவர் இடிந்து விழுந்தபோது சிவப்புநிறக் கயிறு தொங்கவிடப்பட்டிருந்த வீட்டைப் பார்த்து அல்ல, இடிந்து விழாமல் இருந்த வீட்டைப் பார்த்தே ராகாபின் குடும்பத்தினரை இஸ்ரவேல் மக்கள் காப்பாற்றினார்கள்'' (W.W. Wiersbe, *Be Strong: An Old testament Study – Joshua*, pp. 78-79). யோசுவா 6ம் அதிகாரத்தின்படி எரிகோ நகரின் மதிற் சுவர்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் அல்ல படிப்படியாகவே இடிந்து விழுந்தன. சுவர்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் இடிந்து விழுந்திருந்தால் மதிலின் மீது குடியிருந்த ராகாபும் அவளது வீட்டிற்கள் வந்திருந்த அவளுடைய உறவினர்களும் அழிந்து போயிருப்பார்கள்

எரிகோ நகரம் இஸ்ரவேலரினால் கைப்பற்றப்படும் போது, ராகாப் தன் உறவினர்கள் அனைவரையும் தன் வீட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதே வேவுகாரர்கள் விதித்த இரண்டாவது நிபந்தனையாகும். இதைப் பற்றி யோசுவா 2:17ஆ-19ல் அவர்கள் ராகாபிடம் பின்வருமாறு கூறினார்கள்:

> உன் தகப்பனையும், உன் தாயையும் உன் சகோதரர்களையும் உன் தகப்பன் குடும்பத்தார் அனைவரையும், உன்னிடத்தில் உன் வீட்டிலே சேர்த்துக்கொள். இல்லாவிட்டால் நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம். எவனாகிலும் உன் வீட்டு வாசல்களிலிருந்து வெளியே புறப்பட்டால் அவனுடைய இரத்தப் பழி அவன் தலையின் மேல் இருக்கும், எங்கள் மேல் குற்றமில்லை. உன்னோடே வீட்டில் இருக்கிற எவன் மேலாகிலும் கை போடப்பட்டதேயாகில், அவனுடைய இரத்தப்பழி எங்கள் தலையின் மேல் இருக்கும் என்றும் சொன்னார்கள் (யோசுவா 2:17ஆ-19).

"இரத்தப்பழி தலையின் மேல் சுமரும்" என்பது ஒருவனின் மரணத்திற்குத் தானே காரணம் என்பதைக் கூறும் அக்கால முறையாகும்.[66] வீட்டுக்கு வெளியில் யாராவது மரித்தால் அதற்குத் தாங்கள் பொறுப்பல்ல என்பதனால், யுத்த காலத்தில் குடும்ப அங்கத்தினர் அனைவரையும் வீட்டுக்குள் கூட்டிச் சேர்க்கும்படி வேவுகாரர்கள் ராகாபிடம் கூறினார்கள்.

மூன்றாவதாக, தாங்கள் வந்துபோனது இரகசியமாகவே இருக்கவேண்டும் என்றும் வேவுகாரர்கள் ராகாபிடம் கூறினார்கள். யோசுவா 2:14லும் இதைப் பற்றி அவளிடம் தெரிவித்திருந்த வேவுகாரர்கள், மறுபடியுமாக 20ம் வசனத்தில் இதைப் பற்றி பின்வருமாறு கூறினார்கள்:

> 'நீ எங்கள் காரியத்தை வெளிப்படுத்தினாயோனால்,'[67] நீ எங்கள் கையில் வாங்கின ஆணைக்கு நீங்கலாயிருப்போம் என்றார்கள் (யேசுவா 2:20).

வேவுகாரரின் மூன்று நிபந்தனைகளுக்கும் ராகாப் இணங்கினாள். இவற்றில் ஒன்றை அவள் உடனடியாகவே நிறைவேற்றினாள். அதாவது, வேவுகாரர்களைத் தன் வீட்டிலிருந்து அனுப்பிவிட்ட உடனேயே, அவள் அவர்கள் கொடுத்த சிவப்பு கயிறைத் தன் வீட்டு ஜன்னலில் கட்டிவைத்தாள். இது தேவன் மீது அவளுக்கு இருந்த விசுவாசத்தின் செயலாக உள்ளது. தேவனை விசுவாசித்த ராகாப், அவர் தன்னை நிச்சயம் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையுடன், வேவுகாரரின் அறிவுறுத்தலின்படி சிவப்புக் கயிறைத் தன் வீட்டு ஜன்னலில் கட்டினாள். இதைப் பற்றி யோசுவா 2ம் அதிகாரம் 21ம் வசனத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

---

[66] D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 263. லேவியராகமம் 20:9, 2சாமுவேல் 1:16, 1ராஜாக்கள் 2:37, எசேக்கியல 18:13, 33:4 போன்ற வசனங்க ளிலும் இத்தகைய சொற்பிரயோகத்தை நாம் அவதானிக்கலாம்.

[67] "நீ எங்கள் காரியத்தை வெளிப்படுத்தினால்" என்பது, தாங்கள் எவ்விதமாக எப்போது எரிகோவைத் தாக்கவருவோம், அப்பபோது எப்படி உனது குடும்பத்தினரைக் காப்பாற்றுவோம் என்று வேவுகாரர்கள் ராகாபிடம் கூறியவிடயங்களாகும் (D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 263). மேலும், வேவுகாரர்கள் மூன்று நாட்கள் எரிகோவிற்கு வடக்கே இரக்கும் மலையில் ஒளிந்திருப்பதையும் உள்ளடக்கியுள்ளது (R.Hess, *Joshua: Tyndale Old Testament Commentaries*, p. 94).

அதற்கு அவள், உங்கள் வார்த்தையின்படியே ஆகக்கடவது, என்று சொல்லி, அவர்களை அனுப்பிவிட்டாள். அவர்கள் போய்விட்டார்கள். பின்பு அவள் அந்த சிவப்புக் கயிற்றை ஜன்னலிலே கட்டிவைத்தாள் (யோசுவா 2:21).

ராகாபின் குடும்பத்தினரைக் காப்பாற்றுவதாக வேவுகாரர்கள் வாக்களித்த போதிலும், அவர்கள் அவளுக்குச் சில நிபந்தனைகளை விதித்தது நாம் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விடயமாக உள்ளது. பொதுவாக, வாக்குத்தத்தங்கள் நிபந்தனைகளையும் உள்ளடக்கியவைகளாகவே இருக்கும். மனிதர்கள் கொடுக்கின்ற வாக்குத்தத்தங்கள் மட்டுமல்ல, தேவன் மனிதருக்கு கொடுத்துள்ள வாக்குத்தத்தங்களும் நிபந்தனைக்குட்பட்டவைகளாகவே உள்ளன. தேவன் மனிதர் மீது கிருபையும் இரக்கமும் உடையவராய் இருக்கின்ற போதிலும், அவர் நமது நன்மையைக் கருத்திற் கொண்டவராக, அவர் நமக்கு வாக்களித்துள்ள ஆனந்தமும் ஆசீர்வாதமுமான வாழ்வை அனுபவித்து மகிழ்வதற்குச் சில நிபந்தனைகளை விதித்துள்ளார். உதாரனத்திற்கு இயேசுகிறிஸ்து நமக்கு பாவ மன்னிப்பையும், மெய்யான நித்திய வாழ்வையும் தருவதாக வாக்களித்துள்ளார். ஆனால், இயேசுகிறிஸ்து அருளும் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு, அவர் உலக மக்களுக்காகச் சிலுவையில் செலுத்திய பாவப்பரிகாரப் பலியை நாம் விசுவாசத்தினால் நம்முடையதாக்கிக் கொண்டு, அவரை நம் வாழ்வின் தெய்வமாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அதேபோல, அவர் வாக்களித்துள்ள மகிழ்ச்சிகரமான வாழ்வை அனுபவிப்பதற்கு வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழவேண்டியது அவசியம் (சங்.119:1-2).[68]

## 2.ராகாபிற்கு கிடைத்த வாழ்விடம்

இஸ்ரவேலின் வேவுகாரர்கள் ராகாபிற்கு வாக்களித்த விதமாக, எரிகோவின் அழிவிலிருந்து அவளைக் காப்பாற்றினார்கள். இதனால், வாக்குத்தத்த பூமியில் ராகாபுக்கு ஒரு வாழ்விடமும் கிடைத்தது. இஸ்ரவேல் மக்களை, யோர்தான் நதியைக் கடந்து எரிகோவை அழிக்கும்படி கட்டளையிட்ட யோசுவா, தான் அனுப்பிய வேவுகாரர்கள் ராகாபிற்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காக, அவளையும் அவளது குடும்பத்தினரையும் அழிக்க வேண்டாம் என்று கட்டளையிட்டார். யோசுவா 6ம் அதிகாரம் 17ம் வசனத்தில் யோசுவாவின் இவ்வார்த்தைகள் குறிப்பிடப்பட்டுள்ளன:

நாம் அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்து வைத்தபடியால் அவளும் அவளோடே வீட்டுக்குள் இருக்கிற அனைவரும் மாத்திரம் உயிரோடிருக்கக்கடவர்கள் (யோசுவா 6:17).

---

[68] 119ம் சங்கீதத்தின் முதலிரு வசனங்களிலும், "கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். அவருடைய சாட்சிகளைக் கைக்கொண்டு அவரை முழு இருதயத்தோடும் தேடுகிறவர்கள் பாக்கியவான்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

யோசுவா தன் வேவுகாரருக்கு உதவி செய்த ராகாபிற்கு பிரதியுபகாரமாகவும், வேவுகாரர்கள் ராகாபிற்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவதற்காகவும், ராகாபின் குடும்பத்தைக் காப்பாற்றினான். யோசுவா 6ம் அதிகாரம் 22ம் 23ம் வசனங்களில் இதைப் பற்றி பின்வருமாறு நாம் வாசிக்கலாம்:

> யோசுவா, தேசத்தை வேவுபார்த்த இரண்டு புருஷரையும் நோக்கி, நீங்கள் அந்த வேசியின் வீட்டில் போய், நீங்கள் அவளுக்கு ஆணையிட்டபடி அந்த ஸ்திரீயையும் அவளுக்கு உண்டான யாவையும் அங்கேயிருந்து வெளியே கொண்டு வாருங்கள் என்றான். அப்பொழுது வேவுகாரரான அந்த வாலிபர் உள்ளே போய் ராகாபையும் அவள் தகப்பனையும், அவள் தாயையும், அவள் 'சகோதரர்களையும்'[69] 'அவளுக்குள்ள யாவையும்,'[70] அவள் 'குடும்பத்தார்'[71] அனைவரையும், வெளியே அழைத்துக் கொண்டு வந்து அவர்களை இஸ்ரவேல் பாளயத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள் (யேசுவா 6:22-23).

ராகாப் கானானியப் பெண்ணாக இருந்தமையால், அவளும் அவளது உறவினர்களும், யூதமார்க்கச் சடங்காசாரங்களின்படி அசுத்தமானவர்களாக இருந்தார்கள். இதனாலேயே ஆரம்பத்தில் அவர்கள் இஸ்ரவேல் மக்களின் பாளயத்திற்குப் புறம்பாக இருக்க வேண்டியாயிருந்தது (யோசு.6:23ஆ). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி சடங்காசார ரீதியாக அசுத்தமானவர்களாகக் கருதப்படுபவர்கள், சுத்திகரிக்கப்படுவதற்காக ஏழு நாட்கள் பாளயத்திற்குப் புறம்பாக இருக்கவேண்டியது அக்காலத்தில் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் இருந்த ஒரு பழக்கமாகும்.[72] புறஜாதி மக்களில், ஆண்கள் அனைவரும் இஸ்ரவேல் மக்களோடு சேர்ந்து வாழ்வதற்கு முன்பு விருத்த சேதனம் செய்து கொள்ளவேண்டிதும் அவசியமானதாக இருந்தது. சடங்காசார ரீதியாக ராகாபும் அவளது உறவினர்களும் சுத்திகரிக்கப்பட்ட பின்னர் அவர்களும் இஸ்ரவேல் மக்களாகவே கருதப்பட்டனர். யோசுவாவின் புத்தகம் எழுதப்படும் காலத்தில் ராகாப் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் குடியிருந்ததை யோசுவா 6:25 அறியத்தருகின்றது.

> எரிகோவை வேவுபார்க்க யோசுவா அனுப்பின ஆட்களை ராகாப் என்னும் வேசி மறைத்துவைத்தபடியினால், அவளையும் அவள் தகப்பன் வீட்டாரையும் அவளுக்குள்ள யாவையும் யோசுவா உயிரோடே வைத்தான். அவள் இந்நாள் வரைக்கும் இஸ்ரவேலின் நடுவிலே குடியிருக்கிறாள் (யோசுவா 6:25).

---

69 இவ்வசனத்தில் சகோதரர்கள் என்பது சகோதரிகளையும் உள்ளடக்கிய பதமாகவே உபயோகிக்கப் பட்டுள்ளது. யோசுவா 2:13ன்படி ராகாபிற்குச் சகோதரிகளும் இருந்துள்ளனர் (C.F.Keil & F.Delitzsch, *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*, p. 71).

70 "அவளுக்குள்ள யாவையும்" என்பது, அவளுடைய வீட்டிலிருந்த பொருட்களை அல்ல, அவளது உறவினர்களையே குறிக்கின்றது (*Ibid*. P. 71).

71 இவ்வசனத்தில் குடும்பத்தார் என்பது, அவளது இரத்தசம்பந்தமான உறவினர்களைக் குறிக்கின்றது. ஏனைய உறவினர்கள் திருமணத்தின் மூலம் உறவினர்களாகியவர்களாவர் (*Ibid*. P. 71).

72 இது எண்ணாகமம் 31:19ல் தீட்டுப்பட்டவர்கள் சுத்திகரிக்கப்படும் முறை பற்றிய கட்டளையின்படியான செயல்முறையாக இருந்தது. "இஸ்ரவேல் மக்களினுடைய பாளயம் பரிசுத்தமானதாக இருந்தமையால் அசுத்தமும் தீட்டானவைகளும் சுத்திகரிக்கப்படாத நிலையில் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட வில்லை" (லேவி.13:46, எண்.5:3, 31:19, உபா.23:3, 23:14 D.H.Madvig, *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*, p. 282; T.C.Butler, *Joshua: Word Biblical Commentary Volume 7*, p. 71).

ராகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவாசித்து, சடங்காசார ரீதியாகப் பரிசுத்தமாக்கப்பட்டபடியால் அவளுக்கு இஸ்ரவேலில் வாழ்வதற்கு ஒரு இடம் கிடைத்தது. இன்று நாம் யூதமார்க்கச் சடங்காசாரத்தின்படி அல்ல, இயேசுகிறிஸ்து வினுடைய இரத்தத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் செயலினாலுமே பரிசுத்தமாக்கப் படுகின்றோம் (1யோவா.1:9, 1பேது.1:2). எனவே, நாம் தேவனுடனும், அவருடைய மக்களோடும் ஐக்கியத்துடன் வாழ்வதற்கு, நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்த ஏற்றுக் கொண்டு, அவரது ஆவியானவரின் மூலமாக நம்மைப் பரிசுத்தமாக்கிக் கொள்ள வேண்டியது அவசியம் (1யோவா.1:3-7, 2தெச.2:13).

ராகாபின் வாழ்வு, இரட்சிக்கப்படும் விசுவாசிக்கு சிறந்த ஒரு விவரணமாக உள்ளது. அவள் கானானியப் பெண்ணாக இருந்தமையால், தேவனுடைய ஜனங்களைச் சேராதவளாக, அவருடைய மக்களுக்குப் புறம்பானவளாகவே இருந்தாள். இதைப் போலவே, இயேசுகிறிஸ்துவை அறியாதவர்களும் தேவனுடைய சபைக்குப் புறம்பானவர்களாக இருக்கின்றனர். ஆரம்பத்தில் ராகாப் இஸ்ரவேலைச் சேராதவளாக இருந்தமையால், தேவனுடைய சிறப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதவளாக இருந்தாள். இவ்விதமாகவே தேவனுடைய சபைக்குப் புறம்பானவர்களது நிலைமையும் உள்ளது (எபே.2:12). ஆனாலும், ராகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும், அவரது செயல்களையும் கேள்விப்பட்டு, அவரே உண்மையான தெய்வம் என்பதை அறிந்து கொண்டாள். அதேபோல, நாமும் வேதாகமத்தின் மூலமாகத் தேவனையும் அவரது செயல்களையும் அறிந்து கொள்ள வேண்டும். எனினும், தேவனைப் பற்றிய வெறும் அறிவு மட்டும் நமக்குப் போதாது. நாம் அவரை விசுவாசித்து அவரை நம் வாழ்வின் தேவனாக ஏற்றுக் கொண்டு, அவரை மட்டுமே சேவிப்போம் என்று தீர்மானிக்க வேண்டும். யுத்தத்தினால் கைப்பற்றப்படும் நாடுகளிலுள்ள சகல மக்களையும் அழிக்கும்படி தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு அறிவுறுத்தியிருந்த போதிலும் (உபா.7:1-6, 20:16-18), ராகாப் தேவனை விசுவாசித்தமையால் யுத்ததத்தின் அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டாள் (எபி.11:31).' அதேபோல நாமும், உலக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவை விசவாசித்து ஏற்றுக் கொள்ளும் போது, உலகத்தோடு சேர்ந்து ஆக்கினைக்குட்பட்டுப் போகாமல், நித்திய காலமாகத் தேவனோடு வாழக்கூடிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம் (யோவா.3:16-18, 11:25-26).

ராகாப் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவாசித்து, வேவுகாரர் கூறிய விதமாக சிவப்பு நிறக் கயிறைத் தன் வீட்டு ஜன்னலில் கட்டிவைத்து (யோசு.2:21), தன் உறவினர்களையும் தன் வீட்டிற்குள் கூட்டிச் சேர்த்திருந்தாள். இஸ்ரவேலர் எரிகோவை அழிக்கும் போது, அவளுடைய உறவினர்கள் அவளுடைய வீட்டில் இருந்தமையினாலேயே யுத்தத்தின் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டார்கள் (யோசு.6:23). அச்சமயம் ராகாபின் வீடு மட்டுமே பாதுகாப்பான இடமாக இருந்தது. தேவன் தன் நாட்டை இஸ்ரவேல் மக்களுக்கு கொடுத்து விடுவார் என்பதை நன்கறிந்திருந்த ராகாப், இஸ்ரவேலின் வேவுகாரர் தனக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி, தன் வீடு

நிச்சயமாக யுத்தத்தின் அழிவிலிருந்து பாதுகாக்கப்படும் என்பதை அறிந்தவளாக, தன் உறவினர்கள் அனைவரையும் அவள் தன் வீட்டிற்கு அழைத்து வந்திருந்தாள். உண்மையில், ஜலப்பிரளய காலத்தில் நோவா செய்தது போலவே, ராகாபும் செய்துள்ளாள். வரவிருக்கும் ஜலப்பிரளய அழிவிலிருந்து காக்கப்படுவதற்காகத் தேவன் அறிவுறுத்தியிருந்த விதமாகத் தன் குடும்பத்தினரை நோவா போழைக்குள் கொண்டு வந்தான் (எபி.11:7). ராகாபும், யுத்த அழிவிலிருந்த தன் உறவினர்களைக் காப்பாற்றுவதற்காக, வேவுகாரரின் அறிவுறுத்தலின்படி அவர்களைத் தன் வீட்டில் வைத்திருந்தாள். இதேவிதமாக, உலகின் மீது வரவிருக்கும் அழிவிலிருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காக, கிறிஸ்தவர்களாகிய நமக்கு, மக்களை இயேசுகிறிஸ்துவுக்குள் கொண்டுவரும்படியான கட்டளை கொடுக்கப்பட்டுள்ளது (மத்.28:19-20). வரவிருக்கும் அழிவிலிருந்து மக்களை இயசேகிறிஸ்துவினால் மட்டுமே காப்பாற்ற முடியும் (1தெச.1:10) என்பதனால், இன்றே நாம் இயேசுகிறிஸ்துவிற்குள் மக்களைக் கொண்டுவரும் பணியில் ஈடுபடவேண்டியது அவசியமாக உள்ளது.

### 3.ராகாபிற்கு கிடைத்த வரப்பிரசாதம்

ராகாப் ஒரு கானானியப் பெண்ணாக இருந்த போதிலும், அவள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவாசித்து அவருடைய பிள்ளையாகியமையால், அவளுக்குச் சில வரப்பிரசாதங்களும் கிடைத்தன. இஸ்ரவேல் மக்களோடு வாழத்தொடங்கிய அவளுக்கு மணவாழ்வும், மறையாத ஒரு வம்சமும் கிடைத்து. ராகாப் ஒரு விலைமகளாக இருந்தமையால், அவளுக்கு இஸ்ரவேல் மக்கள் மூலம் கிடைத்தவைகள் உண்மையிலேயே தேவனால் அவளுக்கு அருளப்பட்ட வரப்பிரசாதமாகவே உள்ளன. உண்மையில், தேவனை விசுவாசிப்பவர்களுக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களுக்கு ராகாபின் வாழ்வு சிறந்த உதாரணமாக உள்ளது.

ராகாப் இஸ்ரவேல் மக்களோடு வாழ்ந்த காலத்தில் அவளும் ஒரு இஸ்ரவேலியப் பெண்ணாகவே மற்றவர்களால் கருதப்பட்டதோடு, அவளுக்கு சமுதாயத்தில் உயர்வான ஒரு இடமும் கிடைத்தது. அவள் பிறப்பால் ஒரு கானானியப் பெண் என்றோ, தொழிலால் ஒரு விலைமகள் என்றோ, எவரும் அவளை இழிவாக எண்ணவில்லை. அவளுடைய கடந்த கால பாவ வாழ்வை அடிப்படையாகக் கொண்டு எவரும் அவளைப் புறக்கணிக்கவில்லை. இஸ்ரவேல் மக்களின் சரித்திரத்தில் ராகாப் முக்கியமான ஒரு பெண்ணாகவே இருக்கின்றாள். பிற்கால யூதர்கள் ராகாபைத் தங்கள் இனத்தின் தகப்பான ஆபிரகாமின் மனைவி சாராளுக்குச் சமமானவளாகக் கருதினார்கள். இதனால்தான், எபிரேயர் 11ம் அதிகாரத்திலுள்ள விசுவாச வீரர்களின் பட்டியலில் இடபெறும் இருபெண்களில் ராகாபும் ஒருத்தியாகக் குறிப்பிடப்பட்டுள்ளாள் (எபி.11:31). இப்பட்டியலிலுள்ள மற்ற பெண் ஆபிரகாமின் மனைவி சாராள். யாக்கோபின் நிருபத்தில் ஆபிரகாமிற்குச் சமமான நிலையில் ராகாபின் விசுவாசச்

செயல் குறிப்பிடப்பட்டுள்ளது (யாக்.2:25). எல்லாவற்றிற்கும் மேலாக, ராகாப் இயேசுகிறிஸ்துவின் வம்ச வரலாற்றிலும் இடம்பெற்றுள்ளாள் (மத்.1:5).[73]

விலைமகளாக இருந்த கானானியப் பெண்ணான ராகாபை இஸ்ரவேல் மக்கள் உயர்வானவளாகக் கருதியது நாம் கருத்திற்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு விடயமாகும். இன்றைக்குப் பலர், தங்களது கடந்த கால குடும்ப மற்றும் தனிப்பட்ட பின்னணி காரணமாக கிறிஸ்தவ சமுதாயத்தினாலும், சபையினாலும் புறக்கணிக்கப் பட்டு வருகின்றனர். ஒருவர் பிறப்பால் ராகாபைப் போல அந்நிய மதத்தை அல்லது இனத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அல்லது, தொழிலினால் ராகாபைப் போல தவறான நடத்தை உடையவராக இருக்கலாம். ஆனால், அவர் இயேசுகிறிஸ்துவிற்குள் வரும்போது, அவர் ஒரு புது சிருஷ்டி என்பதை நாம் மறக்கலாகாது. அவரது வாழ்வில் பழையவைகள் ஒழிந்து எல்லாம் புதிதாகின்றன (2கொரி.5:17) என்பதை நாம் கருத்திற்கொண்டு, அவரைக் கிறிஸ்துவிற்குள் ஒரு புது சிருஷ்டியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர் தன் பழைய வாழ்க்கையிலுள்ள பாவங்கள் அனைத்திலிருந்தும் மன்னிப்பைப் பெற்று தேவனுடைய பிள்ளையாக மாறியுள்ளமையால், அவரை நாம் புறக்கணிக்கக்கூடாது. அவரது பாவங்களை எல்லாம் தேவன் மன்னித்து அவரைப் பரிசுத்தமாகியுள்ளார் (1கொரி.1:2). மேலும், அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், கிறிஸ்துவிற்குள் இன, ஜாதி வேறுபாடுகளும் இல்லாமற் போயிவிட்டன (கலா.3:26-29, கொலோ.3:11). எனவே, நாம் அவரை நம்முடைய சகோதரராக ஏற்றுக் கொள்ள வேண்டும். விலைமகளான ராகாப் விசுவாசியாகிய பின்னர், இஸ்ரவேல் மக்கள் அவளைத் தங்களுடைய இனத்தவளாக ஏற்றுக் கொண்டது போல, நாமும், இயேசுகிறிஸ்துவிற்குள் இருப்பவர்களை நம் சொந்த இனத்தவர்களாகவே கருத வேண்டும்.

ராகாப் தேவனை விசவாசித்தமையால் அவளுக்கக் கிடைத் இன்னுமொரு வரப்பிரசாதம் மணவாழ்வாகும். இஸ்ரவேலின் யூதா கோத்திரத்தைச்[74] சேர்ந்த “சல்மோன்” என்பவன் ராகாபைத் தன் மனைவியாக ஏற்றுக்கொண்டான் (மத்.1:5).[75] இதனால் விலைமகளாக இருந்த ராகாபிற்கு மணவாழ்வு கிடைத்தது. ராகாபைப் போல விலைமகளாக வாழ்ந்து, பிற்காலத்தில் இயேசுகிறிஸ்துவிற்குள் வரும் பெண்களை,

---

73 யூதர்களினுடைய வம்சவரலாற்று அட்டவணைகளில் பொதுவாக பெண்களின் பெயர்கள் குறிப்பிடப்படாததினாலேயே, தாவீதினுடைய வம்சத்தைப் பற்றிய ஏனைய வரலாற்று அட்டவணைகளில் ராகாபின் பெயர் இடம்பெறவில்லை (M.D.Johnson, *The Purpose of the Biblical Genealogies*, pp. 162-165). ஆனால், ராகாப் மணமுடித்த “சல்மோன்” என்பவனின் பெயர் ரூத்தின் புத்தகத்தில் இடம்பெறும் தாவீதின் வம்ச வரலாற்று அட்டவணையில் இடம்பெற்றுள்ளது. சல்மோனும் ராகாபின் கணவன் என்பதை மத்தேயு 1:5 அறியத்தருகின்றது.

74 இஸ்ரவேல் மக்கள் தங்கள் முற்பிதாவான யாக்கோபின் பிள்ளைகளை அடிப்படையாகக் கொண்டு பன்னிரண்டு கோத்திரங்களாக இருந்தனர்.

75 மோசேயின் மரணத்தின் பின்னர் இஸ்ரவேல் மக்களை வழிநடத்திய யோசுவாவே ராகாபைத் திருமணமுடித்ததாக யூதர்களின் பாரம்பரியக் குறிப்புகள் கூறுகின்றன (C.Cohen, “Rahab” in *Encyclopedia Judaica Volume 13*, p. 1513). எனினும், இது உண்மையாயின் மத்தேயு 1:5ல் குறிப்பிடப்பட்டிக்கும் ராகாப் வேறு ஒரு பெண்ணாக இருக்க வேண்டும். ஆனால், யூதர்களுடைய சரித்திரத்தில், எரிகோ நகரில் விலைமகளாக இருந்த ராகாபைத் தவிர வேறு பெண்கள் இப்பெயரில் இருந்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லை (D.A.Hagner, *Matthew 1-11: Word Biblical Commentary Volume 33*, p. 11). எனவே, மத்தேயுவின் குறிப்பு சரியானதாயின் யூதபாரம்பரியக் குறிப்பு நம்பகமானதாக இல்லை

அவர்களுடைய கடந்தகால வாழ்க்கையை மன்னித்து, அதை முற்றிலுமாக மறந்து, அவர்களைத் தங்கள் மனைவியாக ஏற்றுக்கொள்வதற்கு கிறிஸ்தவ வாலிபர்கள் தயங்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்துவிற்குள் வரும் போது புது சிருஷ்டியாகின்றான். பழையவைகள் ஒழிந்து எல்லாம் புதிதாகின்றமையால் (2கொரி.5:17), கிறிஸ்துவிற்குள் வந்தவர்களை நாம் அவர்களுடைய கடந்த கால வாழ்வின்படியல்ல, மாறாக, கிறிஸ்துவிற்குள் அவர்களுக்கு இருக்கும் நிலையை அடிப்படையாக வைத்தே நடத்த வேண்டும். விலைமகளாக வாழ்ந்தவர்களும் கிறிஸ்துவிற்குள் புது சிருஷ்டிகளாக இருப்பதனால், இத்தகைய பெண்களுக்கும் குடும்ப வாழ்வை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டியது கிறிஸ்தவ ஆண்களின் கடமையாக உள்ளது. விலைமகளாக இருந்து இயேசுகிறிஸ்துவிற்குள் வந்தவர்களை மட்டுமல்ல, தங்கள் கற்பைப் பறிகொடுத்து தவிக்கும் பெண்களுக்கும் வாழ்வளிக்க கிறிஸ்தவ வாலிபர்கள் முன்வரவேண்டும். இயேசுகிறிஸ்துவை அறியாத காலத்தில் விபசாரம் செய்து, பிற்காலத்தில் இரட்சிக்கப்படும் ஆண்களினால் திருமணமுடித்து குடும்பமாக வாழமுடியுமென்றால், விலைமகளாக இருந்து இரட்சிக்கப்படும் பெண்களாலும் மணமுடித்து வாழமுடியும். வேதாகம ரீதியாக இதில் எவ்வித தவறும் இல்லை.[76]

இஸ்ரவேலில் ஒரு குடும்பப் பெண்ணாக வாழ்ந்த ராகாபுக்கு என்றும் மறையாத ஒரு வம்சமும் கிடைத்தது. சல்மோனைத் திருமணமுடித்த ராகாபிற்குப் பிறந்த போவாஸ் என்பவன் இஸ்ரவேலின் ராஜாவாகிய தாவீதினுடைய தகப்பனான ஈசாயின் தகப்பனுடைய தகப்பன் (ரூத்.4:21-22, மத்.1:5). இதனால், ராகாப் தாவீதின் வம்சத்தில் இவ்வுலகத்திற்கு இந்த இயேசுகிறிஸ்துவினுடைய வம்சத்தைச் சேர்ந்தவளாகினாள். அவளுடைய பெயரும் வேதாகமத்தில் இடம்பெற்று இன்றுவரை நிலைத்துள்ளது. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம், அவள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை விசுவாசித்ததேயாகும். அதேபோல, இன்றும்கூட, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள், தேவனுடைய பிள்ளைகளாகி, இஸ்ரவேல் மக்களுடைய வம்சத்தின் ஆவிக்குரிய அங்கத்தினர்களாகின்றனர். விலைமகளான ராகாப் விசுவாசியாகியதைப் போல, நாமும் இன்றே விசுவாசிகளாவோம். அப்போது ராகாபிற்கு கிடைத்த வரப்பிரசாதங்கள் அனைத்தும் நமக்கும் கிடைக்கும்.

Auld, A Graeme. *Joshua, Judges and Ruth: The Daily Study Bible*. Edinburgh: St.Anderw Press, 1984.

Butler, Trent C. *Joshua: Word Biblical Commentary Volume 7*. Waco: Word Books, 1983.

Campbell, Donald K. *Joshua: The Bible Knowledge Commentary Old Testamrnt*. Wheaton: Victor Books, 1985.

Ellison, H.L. *Joshua – 2Samuel: Scripture Union Bible Study Books*. London: Scripture Union, 1967.

Epp, Theodore H. *Joshua – Victorious by Faith*. Lincoln: Back to the Bible, 1968.

[76] இயேசுகிறிஸ்துவை அறிந்து கொள்வதற்கு முன்னர், தேவனுடைய பார்வையில் மனிதர் அனைவரும் பாவிகளாகவே இருக்கின்றனர். எனவே, ராகாபைப் போன்ற விலைமாதர் மற்றவர்களைவிட மோசமான பாவிகள் என்று கருதுவது தவறாகும். சகல பாவங்களுக்கும் இயேசுகிறிஸ்துவில் மன்னிப்பு இருப்பதனால், இயேசுகிறிஸ்துவிற்குள் இருப்பவர்கள் அனைவரும் ஒரே நிலையிலேயே பரிசுத்தவான்களாக இருக்கின்றனர்.

Gaebelein, A.C. *The Annotated Bible: Volume 2 Joshua to Chronicles*. New York: Our Hope Publication, n.d.
Johnson, Marshall D. *The Purpose of the Biblical Genealogies with special Reference to the Setting of the Genealogies of Jesus*. Cambridge: Cambridge University Press, p. 1969.
Hagner, Donald A. *Matthew 1-11: Word Biblical Commentary Volume 33*. Dallas: Word Books, 1993.
Hamlin, E.John. *Joshua: International Theological Commentary*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1983.
Hanson, "Rahab the Harlot in Early Christian Tradition" in *Journal for the Study of the New Testament*. 1 (1978), pp. 53-60.
Keil.C.F. & Delitzsch, F. *Joshua, Judges, Ruth: Biblical Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1960.
Lilley, John. *Joshua: New International Bible Commentary*. Grand Rapids: Zondervan Publishing House, 1979.
Martin, W.J. "Dischronologized Narrative in the Old Testament. in *Supplements to Vetus Testamentum*. 17 (1969), pp. 179-186).
Madvig, Donald H. *Joshua: The Expositor's Bible Commentary Volume 3*. Grand Rapids: Zondervan Publishing House, 1992.
McGee, J.Vernon, *Joshua and Judges*. Pasadena: Thru the Bible Radio Network, n.d.
Meyer, F.B. *Joshua and the Land of Promise*. New York: Fleming H.Revell Company, 1893.
Schaeffer, Francis A. *Joshua and the Flow of Biblical History*. London: Hodder and Stoughton, 1975.
Spina, F.A. "Rahab" in *The International Standard Bible Encyclopedia Volume 4*. G.W.Bromiley ed., Grand Rapids: Eerdmans Publishing Company, 1993.
Sproul, R.C. *Pleasing God*. Wheaton: Tyndale House Publishers, 1998.
Waltke, Bruce K. *Joshua: The New Bible Commentary 21st Century Edition.* Leicester: Inter Varsity Press, 1994.
Wood, B.G. "Did the Israelities Conquer Jericho" in *Biblical Archaeology Review*. 16 (1990), pp. 44-59.
Wiersbe, Warren W. *Be Strong: An Old Testament Study – Joshua*. Colorado Springs: Chariot Victor Publishing, 1993.
Woudstra, M.H. *Joshua: The New International Commentary on the Old Testament*. Grand Rapids: Eerdmans Publishing Company, 1991.